Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



16 வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™


416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



நதி 16 | பாலம் 13 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2006

கணினித் தமிழ் 03



காத்திருப்பது 09



# இலக்கிய விருது

*கடந்த ஜூன் 24, 2006 அன்று ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் மாலை 7:00 மணி அளவில் ஐந்தாவது இயல் விருது விழா நடைபெற்றது. தமிழ் இலக்கியத்தோட்டமும், ரொறொன்ரோ பல்கலைக் கழக தென்னாசிய கல்விமையமும் இணைந்து வழங்கிவரும் இவ் இலக்கிய விருது இம்முறை பேர்க்லி பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் திரு. ஜோர்ஜ் எல். ஹார்ட் அவர்களுக்கு வழங்கப்பட்டது.*


கலிஃபோர்ணியா பேக்லிப் பல்கலைக் கழக தெற்காசியத் (South Asia) துறைத் தலைமைப் பேராசிரியர். ஹாவட் பல்கலைக் கழக சமஸ்கிருதப் பட்டதாரியும் முனைவரும். திராவிடவியல் அறிஞர். சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், தமிழ், கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம் முதலியவற்றில் பன் மொழிப் புலவர். பேராசிரியர் ஏ.கே.ராமானுஜனின் மாணவர்.

இந்த பழந் தமிழ் இலக்கியங்களைத் துறைபோகக் கற்றவர். தமிழின்மீது ஏற்பட்ட காதலால் தமிழையும் தமிழ்ப் பெண்ணையும் காந்தருவக் கல்யாணம் செய்தவர்.

புறநானூற்றை 'Four Hundred Songs of War and Wisdom' என்ற நூலாக ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்து, ஏ.கே.ராமானுஜன் பரிசைப் பெற்றவர். கம்பராமா யண ஆரண்ய காண்டத்தை 'The Forest Book of the Ramayana of Kambar' என்று மொழிெ-பயர்த்தவர். The Poems of Ancient Tamil, Poets of the Tamil Anthologies, The Relation between Tamil and

*தொடர்ச்சி 02ஆம் பக்கம்*

# மன்மோகன் சிங் தலைமையில் பேச்சு



இலங்கைப்பிரச்சினையை சுமுகமாகதீர்த்து வைப்பதற்கு மதுரை ஆதீனம் புது யோசனை ஒன்றை முன் வைத்துள்ளது. நோர்வேயின் தலைமையில் இதுவரை காலம் நடந்து வந்த பேச்சுவார்த்தை, தேக்க நிலையை அடைந்துள்ளதால் ஆதினம் தனது கருத்தை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆதீனத்தலைவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதிய செய்தியில் தலைவர் பிரபாகர், தமிழக முதல்வர் கருணாநிதி, இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ச மற்றும் நோர்வே குழுவினர், இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும் என ஆலோசனை கூறியுள்ளார். பல்வேறு கட்டங்களில் பலவிதமான பேச்சு வார்த்தைகள் நடந்தபோதிலும் அவை வெற்றி பெறாத நிலையில் இந்த அறிவுரையை ஆதினம் தெரியப்படுத்தியுள்ளது.

தமக்குள் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையில் இருந்து வெளியேற அதிபர் மகிந்த தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக பேச்சு நடத்த கொழும்பிலிருந்து வெளிவரும் சுடர் ஒளி நாளேளினுடான செய்தி அனுப்பியுள்ளார். இதற்கு பதிலளித்த தமிழர் பகுதி, ஒளிவு மறைவில்லாமல் பேச்சிற்கு வந்தால் தாமும் அதனை சாதகமாக எடுத்துக் கொள்வதாகப் பதிலளித்துள்ளது. இந்த யோசனையை இலங்கை அதிபர் வைத்திருப்பது ஒரு பெரிய சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

## சுதந்திரக் கட்சித் தலைவரானார் மகிந்த ராஜபக்ச

இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அவருடைய கட்சியின் தலைவராக மத்திய குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மூன்று மணிநேரமாக நடைபெற்ற மத்திய குழுவின் கூட்ட முடிவில் இந்த முடிவு ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மத்திய குழு கூட்டத்தில் சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்க கலந்து கொள்ளவில்லை. சந்திரிகாவின் கையில் இருந்த தலைமைப் பதவி கைமாறுவதை அவர் விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது.

அதே சமயம் சந்திரிகா குமாரதுங்கவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அதே சமயம் தனது தலைமைப் பதவி பறிக்கப்பட்டதற்கு சந்திரிகா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் 61 வது பிறந்நாள் அன்று "சுதந்திரக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச" என்ற அறிவிப்பு வெளியாகியது. இது சுதந்திரக் கட்சியில் உள்ள ஒரு பகுதியினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)
• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

" Making Dreams Reality "
HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1st PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.
*Independently owned and operated

THINKING OF BUYING / SELLING
HomeLife GTA Realty Inc., Brokerage *
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# தமிழைக் காதல் செய்யும் ஜோர்ஜ் ஹாட்டுக்கு "இலக்கிய விருது"



Classical Sanskrit Literature போன்ற நூல்களை எழுதியவர்.

அவரின் ஒப்பியல் அறிவும், ஆய்வுகளால் அவர் கண்டடைந்த முடிவுகளும் தமிழுக்கு இந்திய அளவிலும் உலகளவிலும் கிடைத்த அந்தஸ்து.

பேக்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பீடத்தை உருவாக்குவதற்கு அயராது பாடுபட்டு, பலரிடம் பல லட்சக் கணக்கான பணம் சேர்த்து, அதை அங்கு 1996 இல் உருவாக்கியவர். அங்கு, தமிழில் ஆர்வமிக்க பல சிறந்த முனைவர்களை உருவாக்கி வருபவர்.

80 களிலேயே கணினித் தமிழ் உருவை உருவாக்க உழைத்தவர். இந்தியாவில், தமிழைச் செம்மொழி அந்தஸ்துப் பெற உதவி யவர். அதற்காக அவர் எழுதிய கடிதம், தமிழில் அவர் கொண்ட மதிப்பை வெளிப்படுத்தியது,

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்யும் பேராசிரியர் ஜோர்ஜ் ஹாட் என்ற ஆங்கில அமெரிக்கருக்கு இம்முறை கனடா இலக்கியத் தோட்டம் "இயல் விருதை" வழங்கி கௌரவித்தது.

க்ரியா ராமகிருஸ்ணன் என்று அழைக்கப்படும் எஸ். ராமகிருஸ்ணன். அவருக்கு இவ்வாண்டு 'Non -fiction'- னுக்கான - இலக்கியத் தோட்டம் வழங்கும் பரிசு கிடைத்தது. அப்பரிசுப் பணத்தை அளிப்பவர்கள் லலிதா, ஜெயராமன் தம்பதிகள். அவர்கள் அதை, தன்னலம் கருதாது சேவை செய்யும் உலகிலுள்ள அனைத்து ஆசிரியர்களின் பெயரால் வழங்கியுள்ளனர்.

கிரியா பிரசுரலாயத்தை விஜயலக்சுமி யுடன் இணைந்து நிறுவி, அதன் நிர்வாகப் பங்காளியாக இயங்கி வருபவர். புனைவுகள், நாடகங்கள், கவிதைகள், திறனாய்வு, விவசாயம், சுகாதாரம். சுற்றாடலியல் போன்ற நூற்றுக்கு மேற்பட்ட நூல்களிற்கு ஆசிரியத்துவம் செய்தவர். குறிப்பாக, இந்திய, ஃப்ரெஞ், ஜேர்மன் மொழிகளிலிருந்து தமிழுக்கு மிக முக்கிய நூல்களை மொழிபெ-



பயர்ப்பித்து, ஆசிரியத்துவம் பார்த்து, பிரசுரித்து, தமிழுக்கு புதியதொரு பரிமாணத்தைத் தந்தவர்.

அனைத்திலும் மேலாக, இன்று பலராலும் நினைக்கக் கூடிய, தமிழ் மக்கள் அனைவருக்கும் - மாணவர் முதல் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் போன்றோர்க்கும் - உதவும் மிக முக்கியமான "கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி" யின் தலைமை ஆசிரியர். 1992 இல் வெளிவந்த அவ்வகராதியில் இலங்கை வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை 10 முறை மீள் பிரசுரம் கண்டுள்ளது. கடந்த ஆறாண்டுகளாக அந்த அகராதியை இன்னும் பெரிய முறையில் கொண்டு வருவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்.

**தமிழ் இலக்கியத்தோட்டம் இன்னும் எதிர்காலத்தில் தன்னுடைய சேவையை விரிவுபடுத்தி அந்தந்த வருடத்தில் உலகத்தில் வெளியாகும் சிறந்த தமிழ் புனைவு இலக்கியம், கட்டுரை இலக்கியம் போன்றவற்றிற்கும் சன்மானம் அளிக்கத் திட்டமிட்டிருக்கிறது. தாரளமான கொடையாளி களின் ஆதரவுடன் இந்த திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் சிறப்பாக நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.**

இத்துடன் இருபத்தைந்து வருடங்களாக சிறுகதை, குறுநாவல், நாவல் எழுதிவரும் சோ.தர்மனின் கூகை நாவலை, கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம், புனைவு இலக்கியத்திற்கான பிரிவில் தெரிவு செய்துள்ளது. அதற்கு, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை பரிசு கிடைக்கிறது. அவரின் மகன், வைத்திய கலாநிதி ஒப்பிலாமணி அவர்கள் அதை அளித்துள்ளார். அவர் லண்டன் இங்கிலாந்தில் வசிக்கிறார்.

இந்நிகழ்வில் திருமதி. பார்வதி கந்தசாமி, பேராசிரியர் கிளான்பீல்ட் உரையாற்றினர். பல்கலைக்கழக தமிழ் கற்கும் மாணவகள் திருமதி பார்வதி கந்தசாமி அவர்களின் நெறியாள்கையில் நாடக வடிவில் தமிழின் முக்கியத்துவத்தை நிகழ்த்திக் காட்டினர்.

இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வு நன்றியுரையுடன் இனிதே நிறைவேறியது.


Public Works and Government Services Canada

Travaux publics et Services gouvernementaux Canada

## Office of Small and Medium Enterprises (OSME)

**Public Works and Government Services Canada** (PWGSC) wishes to announce that the Office of Small and Medium Enterprises (OSME) has expanded to open six new regional offices across Canada. The OSME regional offices are being located in PWGSC regional headquarters in: Halifax, Montreal, Ottawa, Toronto, Edmonton, and Vancouver.

The regional offices are part of the OSME's overall effort to make procurement more accountable and cost-effective by ensuring small and medium enterprises (SMEs) have access to compete for government opportunities. The OSME will ensure this access through collaboration with industry associations and individual businesses on procurement policy changes, and through the delivery of training, information, and support tools to SMEs.

For more information, please visit the following website: **www.pwgsc.gc.ca/sme**, or e-mail: **osme@pwgsc.gc.ca**, or call: **1 800 811-1148**.

## Bureau des petites et moyennes entreprises (BPME)

**Travaux publics et Services gouvernementaux Canada** (TPSGC) souhaite annoncer que le Bureau des petites et moyennes entreprises (BPME) prend de l'expansion et qu'il a ouvert six nouveaux bureaux régionaux au pays. Les bureaux régionaux du BPME sont situés dans les bureaux régionaux de TPSGC à Halifax, Montréal, Ottawa, Toronto, Edmonton et Vancouver.

Les bureaux régionaux participent à l'effort global du BPME visant à rendre le processus d'approvisionnement plus rentable et efficace en veillant à ce que les petites et moyennes entreprises (PME) aient la possibilité de participer aux occasions de marchés publics. À cette fin, le BPME consultera les associations sectorielles et les entreprises sur les modifications des politiques sur les achats et il offrira du perfectionnement, de l'information et des outils pour appuyer les PME.

Pour plus de renseignements, consultez le site Web **www.tpsgc.gc.ca/pme**, ou communiquez avec le BPME par courriel, à l'adresse **bpme@tpsgc.gc.ca**, ou par téléphone, au numéro **1 800 811-1148**.

Canada



விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada

TEL: 416-282-8059 FAX: 416-282-4978

e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

***Expert Building Inspections LTD.***

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# பழமை பேசுவது மொழியை வாழவைக்காது

தமிழ்மொழியும் தமிழரும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த மொழியென்றும் மூத்த இனமென்றும் அவை நீண்ட கால நாகரிக வரலாற்றையும் பண்பாட்டையும் கொண்டவை என்றும் அத்துடன் எம்மொழி நீண்ட கால இலக்கிய இலக்கண அறநெறி பண்பாட்டுச் செழுமைகளைக் கொண்டது என்றும், சங்கம் வைத்து வளர்த்த மொழியென்றும் கூறி பெருமையும் இறுமாப்பும் அடைகின்றோம். ஆனால் இன்று எமது வாயும் நாக்கும் சேர்ந்து உச்சரிக்கக் கூடிய சில வேறு மொழிச் சொற்களை எழுத முடியாத அளவிற்கு எமது எழுத்தியல் சொல்லியல் விதிகள் தடை போடுகின்றனவே மொழியின் விருத்தியைப் பொறுத்த வரையில், இதை நாம் அடிப்படைவாதம் பழைமைவாதம் தூயவாதம் ஆகியவற்றின் பேரினால் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? தமிழனின் வாயும் நாக்கும் இப்படித்தான் உச்சரிக்க வேண்டும் என்று வரையறை போடலாமா?

மொழி உருவாகத் தொடங்கி பல ஆயிரம் வருடங்களாக விருத்தியடைந்த நிலையிற்தான் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன்னர் அகத்தியனார் தொல்காப்பியனார் ஆகியோரால் இலக்கணம் வகுக்கப்பட்ட மொழி யென்றும் பின்னர் பவணந்தி முனிவரால் காலத்திற்கேற்ற சில மாற்றங்கள் செய்யப்பட்டு ஆறுமுக நாவலரால் இலக்கணச் சூத்திரங்கள் இலகு தமிழில் எழுதப்பட்டு இன்று பண்டிதர்களாலும் வித்துவான்களாலும் அவற்றின் அடிப்படையில் இலகு செந்தமிழ் இலக்கண நூல்களாக எழுதப்பட்டு சந்தைக்கு வருகின்றன. இவ்விலக்கண விதிகள், அன்று மொழியின் கூறுகளாகிய எழுத்துக்கள் சொற்கள் வாக்கியங்கள் ஆகியவற்றிலும் அவற்றிற்கிடையேயும் அதிகபட்சமாக அவதானிக்கப்பட்ட பொதுக்கோலங்களின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டன என்றே கூற வேண்டும். அன்று இவற்றிற்கு அமையாத விதிவிலக்கான கோலங்களும் அவதானிக்கப்பட்டன. அன்று அவ்வொழுங்கீனங்களுக்குப் பரிகாரந்தேடாமல். அவற்றிற்கென புறம்பான சூத்திரங்கள் வகுக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

மொழி விருத்திக்கு அன்றிருந்த சூழல் வேறு. இன்றிருக்கும் சூழல் வேறு. இதைக் கவனத்திற் கொள்ளாமலே இன்றைய பண்டிதர்களும் வித்துவான்களும் பேராசிரியர்களும் தொல்காப்பியர் பவணந்தி முனிவர் ஆகியோரின் இலக்கணச் சூத்திரங்களை சொல்லுக்குச் சொல் பிசகாமல் அவற்றை அடியொற்றி இலக்கண நூல்களை எழுதுவதும் அல்லாமல் காலத்திற்கேற்ப அதாவது, கணினித் தொழில் நுட்பத்திற்கேற்ப குறிப்பாக அதன் தொழிற் பாட்டு மென்பொருளாக்க தர்க்கவியலுக் கேற்ப மாற்றங்களைச் செய்யாது கற்பித்தும் வருகிறார்கள்.

அவற்றிற்கமையவே தமிழ் எழுத்துக்களும் சொற்களும் வசனங்களும் அமைக்கப்பட வேண்டும் என்று, இன்று அடிப்படைவாதிகளும் பழமைவாதிகளும் தூயவாதிகளும் கங்கணங் கட்டியவாறு நிற்கிறார்கள். இவ்வாதிகள் காலத்திற்கேற்றவாறும் கணினித் தர்க்கவிலுக்கு ஈடு கொடுத்தும் எம்மொழிக்கான இலக்கண வரம்புகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறியும் எழுதியும் வரும் முற்போக்கு எண்ணங் கொண்டவர்களுக்கு எதிராக நாகரிகமற்ற முறையில் கொடுக்குக் கட்டியவாறு பரப்புரை செய்வதோடு எழுதியும் வருகிறார்கள்.

காலத்திற்கேற்றவாறு எம்மொழியில் மாற்றங்கள் புகுத்தப்பட்டால் காலவரையில் எம்மொழி வேறு மொழியாக மாறிவிடும் என்று கூக்குரல் போடுகிறார்கள். அந்த வகையிற்தான் தென் இந்தியாவில் சமஸ்கிருதம் கொண்டிருந்த செலவாக்கினாலும் தமிழின் மேல் அது ஏற்படுத்திய தாக்கத்தினாலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தோன்றின என்று கூறுகிறார்கள். அக்காலத்தில் ஆரியரின் படையெடுப்பினால், சமஸ்கிருதமும் பிராமணக் குருக்கள்மாரும் அரசவையில் பெற்றிருந்த அதி உயர் செலவாக்கும், அன்று நிலவிய போக்குவரத்து தொடர்பாடற் சாதனக் குறைபாடுகளும் வசதியீனங்களும், இந்திய உபகண்டத்தில் மக்கள் குழுமங்களாக வாழ்ந்த பிரதேசங்களை இயற்கையாக எல்லைப் படுத்திய மலைச் சாரல்த் தொடர்களும் பள்ளத்தாக்குகளும் ஆறுகளும் மக்கள் குழுமங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு வாழத்தடுத்தமையுமே அதற்கான உண்மையான காரணங்கள் என்றே கூறவேண்டும்.

**இன்றைய கணினித் தொழில் நுட்பத்திற்கேற்ப ஈடுகொடுத்து மாற்றம் பெற்றால்த்தான் மொழிகள் வாழும். பழமை பேசுவது மொழியை வாழவைக்காது. அழிவைத்தான் தரும்.**

ஆனால் இன்றோ போக்குவரத்து தொடர்பாடற் சாதனங்களும் அச்சிட்டுப் பதிவு செய்யும் தொழில் நுட்பங்களும் அபரிமிதமாக வளர்ச்சி பெற்று உலகமே சுருங்கிவிட்ட நிலையில் ஒரு மொழி இன்னொன்றாக மாறும் சாத்தியமும் வாய்ப்புக்களும் அறவே இல்லை என்றே கூற வேண்டும். ஆனால் மொழி மக்களின் பாவனையில் இருக்கும்வரை அது வாழும் என்றே கூற வேண்டும். ஆகவே மொழி பாவனையில் இருக்கும் வகையில் அது காலத்திற்கேற்றவாறு செம்மை பெறவேண்டும்.

## இலங்கையன்

### எழுத்துச்சீர்திருத்தம்.

ஐக்கிய நாட்டு சர்வ தேசிய குழந்தைகள் கல்வி கலாசார நிதியத்தைச் (UNICEF) சேர்ந்த மொழி வல்லுனர்கள் அண்மையில் வெளியிட்ட ஆய்வு அறிக்கையின்படி, இந்நூற்றாண்டு முடிவில் இருநூறுக்கு மேலான மொழிகள் வழக்கொழிந்து போகுமெனவும், அவற்றுள் தமிழ்மொழியும் ஒன்று என்று கூறியுள்ளார்கள். இதற்கான அடிப்படைக் காரணங்களாவன: (1) இவற்றைப் பேசுபவர்களும் பயன்படுத்துபவர்களும் எண்ணிக்கையில் காலத்தோடு அருகி வருவது, (2) இம்மொழிகளின் சில இலக்கண விதிகள் மிக இறுக்கமாகவும் நெகிழ்ச்சியற்றவையாகவும் சிக்கலாகவும் பகுத்தறிவு சார்ந்த தர்க்க வாதங்களுக்கு ஒவ்வாதிருப்பது (3) சமகால தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து வளர்ச்சி அடைவதை அடிப்படைவாதிகளும் தூயவாதிகளும் எதிர்த்து நிற்பது போன்றவையாகும்.

எம்மொழிக்குரிய சில சிறப்பியல்புகளுள் ஒன்று: எம்மொழிச் சொற்கள் அதிகபட்சம் எழுத்து ரீதியாக உச்சரிக்கப்படக் கூடியன என்பதாகும். அதாவது, எழுத்துக்களுக்கான உச்சரிப்பை ஒலித்து சொற்களை அதிகபட்சம் உச்சரிக்கலாம். இச்சிறப்பியல்பு சிங்களம் மற்றும் இந்திய மொழிகளுக்குமுண்டு. இந்தவகையில் சிங்களம் எனக்குத் தெரிந்தளவில் சிறந்ததென்றே கூறவேண்டும். ஏனென்றால், தமிழிலுள்ள உச்சரிப்பு ஒலிக் கூறுகளிலும் அதிகளவு ஒலிக்கூறுகளையும் அவற்றிற்கான எழுத்துக்களையும் கொண்டிருப்பதேயாகும். ஆரம்பத்தில் எல்லா ஒலிக்கூறுகளுக்கான எழுத்துக்களைக் கொண்டிராத பொழுதிலும் காலவரையில் புதுப்புது எழுத்துக்களை பழைமைவாதம் பேசாமல் மொழியின் வளர்ச்சி கருதி சேர்த்துக்கொள்ளும் பக்குவத்தை சிங்கள மொழியியலாளர்கள கொண்டிருப்பதே அதற்கான காரணமாகும். அந்தவகையில் எந்தவொரு ஆட்பெயரையோ இடப்பெயரையோ மொழி மாற்றாமல் சிங்களத்தில் எழுதமுடியும்.

வாயில் நாக்கை வளைப்பதன் மூலம் வரக் கூடிய எந்த ஒலிக்கூறுகளுக்கும் எழுத்துக்கள் உள்ள மொழியே இன்றைய சூழலில் முழுமை பெற்ற மொழியாக இருக்க முடியுமென இன்றைய முற்போக்கான மொழியியலாளர்கள் கருத்துப் பகர்கிறார்கள். எனவே ஒலிக்கூறுகளுக்கான எழுத்துப் பஞ்சம் இருந்தால் மொழி முழுமை பெறாமல் காலவரையில் வழக்கற்றுப் போய் விடும் என்று மொழியியலாளர்கள் கருதுகிறார்கள்.

இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர் எம்மொழிக்கென தொல்காப்பியனார் பின்னர் பவணந்தி முனிவர் போன்றவர்களால் வகுக்கப்பட்ட இலக்கண விதிகளுக்கமைய தமிழனின் வாயிலிருந்து வரும் ஒலிப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன என்றும் அதற்கு அமையவே தமிழரின் வாய்கள் உச்சரிக்க வேண்டும் என்றும் தவறின் அது நாம் தமிழ் மொழிக்குச் செய்யும் துரோகம் என்றும், மொழியைப் பொறுத்த வரையில் அடிப்படைவாதிகளென்றும் பழைமைவாதிகளென்றும் தூயவாதிகளென்றும் அழைக்கப்படுவோர் குரல் எழுப்புகின்றனர். அந்த வகையில் ஷ ஸ ஜ ஹ ஆகிய கிரந்த எழுத்துக்களோ அவற்றின் ஒலிப்புக்களோ எம்மொழிக்குள் வருவது துடக்கு என்றும் கத்துகிறார்கள். அத்துடன் சொல் முன் எழுத்துக்களையும் பின் எழுத்துக்களையும் இலக்கண விதிகளின்படி வரையறுத்தும் உள்ளார்கள். அதன்படி 'Einstein' என்ற மிகப் பிரபல்யமான விஞ்ஞானியின் பெயரை "அஞ்சுதைன்" என்றும், பிரபல்ய புவியியல் நூல் ஒன்றின் ஆக்கியோன் ஆகிய 'Dudley Stamp' என்பவரின் பெயரை "இட்டலித்தாம்பு" என்றும் 'George' என்ற பெயரை "சோர்யு" என்றும் தாயகத்தில் உத்தியோக மொழி திணைக்களத்தார் அறுபதுகளில் மொழி பெயர்த்தார்கள் என்பது ஞாபகம். இன்றும் கனடாவில் ஒன்று இரண்டு வார ஏடுகள் 'Pakistan' எனும் நாட்டின் பெயரை "பாகிசுதான்" என்றும் 'Palestine' என்ற நாட்டின் பெயரை "பாலசுதீனம்" என்றும் மொழி பெயர்க்கிறார்கள். ஏன் இந்த துடக்கு நிலை.? எழுத்துப் பஞ்சமா?

எது எதுவாயிருந்தாலும் எம்மொழி இந்திய உபகண்டத்தின் மிக ஆதி மொழி என்றும் ஏன் உலக முதல் மொழி என்றும் அதே நேரத்தில் எழுத்து ரீதியாக அதன் சொற்கள் உச்சரிக்கப்படக் கூடிய முறைமையை எம்முன்னோர் அன்று கண்டு பிடித்து கையாண்டார்களே என்பதையும் அறியும் பொழுது நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியாது. ஆனால் எம்மொழிக்கு எவ்வளவோ காலம் பின்னர் பாவனைக்கு வந்த ஆங்கிலம் பிரான்சியம் போன்ற மொழியியல் அடிப்படையில் முழுமை பெறாத மொழிகளைப் பேசும் மேலைத்தேசத்தவர்கள் விஞ்ஞான தொழில்நுட்பங்களில் எவ்வளவோ கண்டுபிடிப்புகளைச் செய்து, ஒரு காலத்தில் உலகம் முழுவதையும் அரசாண்ட நிலையில் இன்று தொழில் விஞ்ஞான தொழில்நுட்பம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் மேலோங்கிய நிலையில் உலக அரங்குகளில் முன்னுக்கு நின்று வழி நடத்துகின்றார்களே என்பதை நினைக்கும் பொழுது எமக்கு இந்நிலை எப்படி ஏற்பட்டது என்ற கேள்வி தான் எழுகின்றது.

அன்று sh, j, h, f, b ஆகிய ஆங்கில எழுத்துக்கள் தரும் ஒலிப்புகளுக்கான எழுத்துருக்கள் இருக்கவில்லை என்றே கூறவேண்டும். ஆனால் சொல்லின் இடையில் அல்லது முடிவில் தனித்து வரும் "க்" மீது உயிர் ஏறும் பொழுது "h" இன ஒலிப்புப் போன்று உச்சரிக்கப்படுகின்றது. உதாரணமாக, காகம், சந்திரிகா ஆகிய சொற்களில் வரும் "க", "கா" ஆகியவற்றிலுள்ள "க்" ஆகிய மெய்யெழுத்து, "h" இன் ஒலிப்பாகிய "ஹ்" ஐப் போல் உச்சரிக்கப்பட வேண்டுமெனக் கற்பிக்கப்பட்டு வந்தது கற்பிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் "ஹ்" உச்சரிப்பு எம்மொழியில் உண்டு என்று சொல்வதில் பண்டிதர்களும் வித்துவான்களும் பெருமைப்படுகின்றார்கள். காக்கை என்ற சொல்லில் வரும் "க்" உம், "கை" இல் வரும் "க்" உம் "ஹ்" ஐப் போலல்லாமல் வல்லின "க்" போன்று அதாவது "k" போன்று உச்சரிக்கப்படுகின்றது.

இது போன்றே ச் ட் த் ப் ற் ஆகிய வல்லின மெய்யெழுத்துக்களின் ஒலிப்புக்களும் என்றே கூறவேண்டும். இவற்றுள் ட், த், ப் ஆகியவற்றின் உச்சரிப்புக்கள் அதிகளவு வேறுபடா விட்டாலும் ச், ற் ஆகியவற்றின் உச்சரிப்புக்கள் மிக வேறுபாடானவை. உதாரணமாக கசம், கச்சல் ஆகிய சொற்களில் உள்ள "ச்" இன் உச்சரிப்பை நோக்குவோமாயின் "கசம்" என்ற சொல்லில் "ஸ்" போன்றும் அதாவது "S" போன்றும், கச்சல் என்ற சொல்லில் "ch" போன்றும் அதாவது சிங்களத்தில் போன்றும் உச்சரிப்பைக் கொண்டுள்ளது.

"ற்" இன் உச்சரிப்பைப் பொறுத்த வரையில் மாறன், மாற்றம் ஆகிய சொற்களை நோக்குவோம். "மாறன்" இல் வரும் 'ற்", "R" இன் உச்சரிப்பையும் "மாற்றம்" இல் வரும் "ற்", "T" இன் உச்சரிப்பையும் கொண்டுள்ளன. இவ்வகை முரண்பாடுகள் மொழியைக் கற்கத் தொடங்குபவர்களுக்கும் விரும்புவர்களுக்கும் வாசிப்பதிலும் எழுதுவதிலும் சிரமங்கள் ஏற்படலாம். இவற்றை வேறுகண்டு வாசிக்கப் பழகிக் கொண்டால், அவை வேறுபாடுகளாக எமக்குத் தெரிவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக கணினி மூலம் எம்மொழியை எழுத்து ரீதியாக வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான நிரல்படுத்தலைச் (programming) செய்வதில் தான் கணினி விற்பன்னர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

ஆங்கிலத்தில் sh, j, h, f, b அகியவற்றின் உச்சரிப்பு ஒலிப்புக்களை தமிழைப் பேசும் பொழுது உச்சரிப்பது, எம்மொழியை நாம் மாசுபடுத்துகின்றோம் என்றும், நாம் எம்மொழிக்கு செய்யும் தீங்கென்றும், எம்மொழியின் வளர்ச்சியை விரும்பாத பழமை வாதிகளும் தூயவாதிகளும் கொக்கரிக்கின்றார்கள். sh, j, h ஆகியவற்றின் ஒலிப்புக்களுக்கான கிரந்த எழுத்துக்களாகிய ஷ், ஜ், ஹ் காலா காலமாக வழக்கில் இருந்து வந்த பொழுதிலும் அவை எம்மொழியின் தூய்மையைக் கெடுத்துவிடும் என்றும் எம்மொழியை அழித்துவிடும் என்றும் இவர்கள் கூக்குரல்

*தொடர்ச்சி 22ஆம் பக்கம்*

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# தெய்வ கட்டளை

## கோயிலும் கூத்தும் (3)

வீரபத்திரர் ஆலயத்தில் எட்டாம் மடைக்குக் கூத்து ஆடப்படுவது வழக்கம். இதற்கும் சிறு சடங்கு நடைபெறுவதை நான் பார்த்திருக்கிறேன்.

எனது தாய் மாமன் திரு. தம்பியையா தம்பாப்பிள்ளை ஒரு கூத்துக் கலைஞர். அவருக்கு ஏராளமான காணி நிலங்கள் இருந்தன. பனங்காணிகள், தென்னந் தோப்புகள், வயல் நிலங்கள் என்று எல்லாவற்றினாலும் அவருக்கு வருமானங்கள் வரும். அவற்றை மேற்பார்வை செய்து உரிய வருமானங்களைக் கொடுப்பவர்கள் நம்பிக்கைக்குரிய அவரது மனைவி வழிச் சொந்தக்காரர்தாம்.

ஆக, மாமனாருக்குப் போதிய வருமானமும் இருந்தது, ஓய்வு நேரமும் இருந்தது. இவை இரண்டும் அவரது கூத்துக் கலை ஈடுபாட்டுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன.

நான் ஐந்து வயதுக்கும் ஏழு வயதுக்கும் இடையில் முதலில் தந்தை, பின்னர் தாய் என்று இருவரையும் இழந்து விட்டேன். பெற்றார் இல்லாத குறையைப் போக்கி, என்னையும் எனது தம்பி கணபதிப்பிள்ளையையும் எவ்வித குறையுமின்றி வளர்த்தெடுத்தவர் எனது மாமனார் தம்பாப்பிள்ளைதான்.

பெற்றார் வாழும் பொழுதே என்னைக் கண்டால், தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு கடைத் தெருவுக்கோ கள்ளுக் கடைக்கோ போவார். கடைத் தெருவுக்குப் போனால் சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கித் தருவார். கள்ளுக் கடைக்குச் சென்றால் (அவருக்குக் கொஞ்சம் வெறியேறிய பின்னாக இருக்கும்) எனக்கும் கள்ளைப் பருக்க முற்படுவார். ‘குடியடா!’ என்று உறுக்குவார். நான் அழத் தொடங்குவேன். அவர் பாட்டுப் பாடிச் சமாதானப்படுத்தித் தூக்கிக் கொஞ்சுவார்.

இதற்கிடையில் அம்மா பெடியனைக் காணவில்லை என்று தேடத் தொடங்கிவிடுவார். நான் மாமாவின் தோளில் வந்து இறங்குவதைக் கண்டு ஆறுதல் அடைவார்.

தெய்வ கட்டளை

வீரபத்திரர் முதலாம் மடையிலேயே எட்டாம் மடைக்குக் கூத்தாட வேண்டும் என்று எனது மாமனாருக்கு உத்தரவு பிறப்பித்து விடுவார். இது ஒரு சடங்காக நடைபெறும்.



முதலாம் மடையன்று தம்பு அண்ணரில் வீரபத்திரர் ஆடிவந்து கூட்டத்தில் நிற்கும் மாமனாரின் கையைப் பிடித்து இழுத்துக் கோயில் முன்றலின் நடுவில் நிற்கச் செய்வார். அதனைக் கண்டதும் அங்கு இங்கு நின்ற அடியவர் எல்லோரும் மாமனாரைச் சூழ்ந்து நிற்பர். வீரபத்திரர் நடுவிலே நிற்கும் மாமனாரைச் சுற்றிச் சுற்றி, இடையிடையே நின்று அவரை நிமிர்ந்து பார்த்த வண்ணம் ஆடுவார். மேளங்களும் ஊன்றி முழங்கும்.

திடீரென்று வீரபத்திரர் கையை நீட்டுவார். கோயில் உதவியாளர் அவரது கையில் நீரை வார்ப்பார். அந்த நீரை மாமனாரின் முகத்தில் வீரபத்திரர் எற்றுவார். இப்படி மூன்று தடவைகள் எற்றியபின், மாமனாருக்கு வீரபத்திரர் திருநீறு கொடுப்பார். மாமனார் அதனை வாங்கி நெற்றியிலே பூசுவார். பின்னர் எலுமிச்சம் பழம் ஒன்றைக் கொடுத்துவிட்டு வீரபத்திரர் மீண்டும் ஆடுவார்.

சிறிது நேரம் ஆடியபின், மாமனார் கையைப் பிடித்தவண்ணம் வீரபத்திரர் கூத்தாடு களம் நோக்கிச் செல்வார். களம் கோயிலுக்குத் தெற்கில் உள்ளது. தெற்கில், கிழக்கு மேற்காக நீண்டுள்ள வெளியிடத்திலேதான் கூத்து ஆடப்படுவது வழக்கம். ஆடுகளம் கிழக்கில் இருக்கும். பார்வையாளர் பக்கம் மேற்காக இருக்கும்.

வீரபத்திரர் மாமனாரை ஆடுகளத்துக்கு அழைத்துச் செல்ல, மேளங்களும் அடியார் கூட்டமும் அவரைப் பின்தொடரும். அங்கு ஒரு தடியை நட்டு, அதற்குத் தண்ணீர் ஊற்றி, வெள்ளைத் துணித் துண்டு ஒன்றைக் கட்டி, பூவும் எலுமிச்சம் பழமும் வைத்து அதனைச் சுற்றி ஆடுவார். பின்னர் மாமனாரைப் பார்த்துப் பார்வையாற் பேசுவார். அவரும் தலை அசைப்பார். அவ்வளவில் வீரபத்திரர் ஆடியவண்ணம் கோயிலுக்குத் திரும்பிவிடுவார்.

இந்தச் சடங்கினால் அறியக் கிடப்பது யாதெனில், எட்டாம் மடைக்கு மாமனார் கூத்துப் போட வேண்டும் என்பதாகும்.

### எனதூர்க் கூத்துகள்

நான் முதன்முதலிற் பார்த்த கூத்து வீரபத்திரர் கோயிலில் எனது மாமனார் ஆடிய நொண்டி நாடகந்தான். பூதத்தம்பி நாடகத்திலும் அவர் நடித்திருக்கிறார்.

கூத்துச் செலவுகளுக் கெல்லாம் மாமனாரே பொறுப்பு. தனது கூத்துக்களுக்கு மட்டு மல்லாது, மற்றவர் நடிக்கும் கூத்துகளுக்கும் அவர் தாராளமாகப் பொருளுதவி வழங்குவார். அப்படிப் பொருளுதவி பெற்ற ஒருவர் கறுப்பி சின்னர் என்பவர்.

கறுப்பி சின்னருக்கு ஓர் அண்ணமார் கோயில் உண்டு. நுணாவில் தெற்கில் வயல் நிலங்களின் எல்லையில் தொடர் வண்டிப் பாதைக்கு அருகாமையில் அக்கோயில் உள்ளது. அதிலும் வருடாந்த மடைகள் சிறப்பாக நடைபெறும்.

வீரபத்திரர் கோயிலில் மச்சம் மதுபானம் எதுவும் படைக்கப்படுவ தில்லை. அண்ணமார் ஆலயத்தில் அவையெல்லாம் படைக்கப்படும். கோழிகளைத் தீயில் வேக வைத்து, உரித்து முழுக்கோழி இறைச்சியாகச் சோற்றுக் குவியல்களிற் குத்தி வைப்பார்கள். ஆட்டு இறைச்சியும் படைக்கப்படும். ஒவ்வொரு சோற்றுக் குவியலுக்குப் பக்கத்திலும் கள்ளு முட்டிகளும் சாராயப் போத்தில்களும் வைக்கப்படும்.

கறுப்பி சின்னரில் அண்ணமார் உருக்கொள்வார். அவர் தம்பு அண்ணரிலும் பருத்த உடல் உள்ளவர். இருந்தாலும் இறுக்கமான மேனி. இருண்ட கறுப்பு நிறம் என்றாலும் கவர்ச்சியான தோற்றம் உள்ளவர். அவர் அண்ணமார் ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அண்ணமார் ஆலயத்திலும் எட்டாம் மடைக்குக் கூத்துப் போடப்படும். மாமனாருடன் சென்று அங்கு கோவலன் கூத்துப் பார்த்தது நன்கு நினைவில் உள்ளது. அதில் கோவலன் பாடிய ஒரு பாட்டின் சில வரிகளை இன்றும் சில சமயங்களில் நான் முணுமுணுப்பதுண்டு. அவை

பத்து லட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் - சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே!

என்று செல்லும். கூத்துப் பாடல்களில் இப்படி எதுகை மோனைகள் நிறைந்திருக்கும். இவற்றை இராகத்தோடு பாடுகையில் சொல்லோசை செவிக்கு அதிக இன்பம் அளிக்கும்.



கவிஞர் வி. கந்தவனம்





# ஒரு மேதையின் பரிச்சயம் - 2

ராஜரத்தினம் வரலாறு எழுத முனைந்தவர் நாதஸ்வரம் அல்ல, நாகஸ்வரம் என்ற திருத்தம் முதல் கொண்டு, தான் அது பற்றி சேகரித்த வரலாறும், கல்வெட்டுக்களிலும், இலக்கியத்திலும் நாகஸ்வரம் பற்றிய பழமை மிக்க செய்திகள், நாகஸ்வர வாத்தியத்தின் கூறுகள், சிற்பங்களில் காணும் சாட்சியங்கள், அவற்றில் எல்லாம் காணப்படும் நாகஸ்வரம் ஒரு நீண்ட குழல் போலவே காட்சியளிக்கின்றது. அவற்றில் விரிந்து மலராகக் காணும் கீழ் அணைசு இல்லை. கொடுக்கப்பட்டுள்ள ஓவியத்திலும் அது முகவீணை போலச் சிறி யதாகத்தான் இருக்கிறது.

ராஜரத்தினம் நடித்த, வாசித்த, பாடிய படங்கள், 1787-1846 கீவளூர் சுப்பிராய பிள்ளை தொடங்கி இன்றைய வளையபட்டி, ஹரித்வாரமங்கலம் வரை 71 சிறந்த தவில் வித்வான்கள் பட்டியல் (எங்கேயிருந்து 18-ம் நூற்றாண்டு தவில்காரரைக் கண்டுபிடித்தார் சோழ நாடன்?) இப்போது கிடைக்கும் இசைதட்டுகள் 1880-1923 செம்பொன்னார் கோயில் இராமசாமிப்பிள்ளையிலிருந்து தொடங்கி சின்ன மௌலானா வரை என்று பட்டியல் தருகிறார், திரைப்படங்களில் நாகஸ்வரம் வாசித்தவர், வாசித்த திரைப்படங்கள் பற்றிய விவரங்கள், கல்கி கி.ராஜநாராயணன் இருவரும் எழுதிய கட்டுரைகள் (இதில் ராஜநாராயணன், தானும், அழகிரிசாமியும் பெற்ற அனுபவங்களை மிக அழகாக எழுதுகிறார்), இவையெல்லாம் முடிந்தவரை அவர் சேகரித்தவை. ஆழ்ந்த ஈடுபாடு இல்லாமல் இவை வந்திருக்கமுடியாது.

சோழநாடன், தனித்திருந்து பல அரிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர். நல்ல சினிமாவில் ஆர்வமுள்ளவர் அதற்காக பத்திரிகை ஒன்று நடத்துபவர். வீணை தனம், பாலசரஸ்வதி போன்ற கலைஞர்களைப் பற்றியும் வரலாறுகள் எழுதியிருக்கிறார். லத்தீன் அமெரிக்க எழுத்துக்களிலும், புலம்பெயர்ந்த தமிழர்களின் எழுத்துக்களிலும் ஈடுபாடுகொண்டவர். இவ்வளவு நல்ல விடயங்கள் இருந்தும், தன் எழுத்தில் அனாவசிய கடுமையை, ஆதாரம் காட்டாத கடுமையை வெளிப்படுத்துகிறார். 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த வேங்கடமஹா தன் சதுர்தண்டி பிரகாசிகா என்ற இசை நூலில், மேளகர்த்தா ராகங்கள் 72 என்று வகைப்படுத்தியிருக்கிறார். அவை அச்சேறியதே 1934-ல் தான். மேளகர்த்தா ராகங்கள் 32 தான், வேங்கட மஹா செய்துள்ளது "ஊழல்" என் று சோழ நாடன் எழுதுகிறார்.

ஒருவருடைய முடிவுகளோடும் ஆராய்ச்சி முறைகளோடும் வேறுபடுவது வேறு. நாட்டிய சாஸ்திரத்திலிருந்து தொடங்கி, பிருகத் தேசி, சங்கீத ரத்னாகரம், என்று அடுகடுக்கான இசை நூல்கள் வந்துள்ளன. தமிழிலும் நிறைய இருந்தவை, மறைந்தவை, இப்போது அரிதாகிவிட்டவை என பல உண்டு.. வேங் கட மஹாயே தன் முன்னோடி ராமாமாத்தியரோடு கடுமையாக வேறுபடுவர். ஆனால், ஒரு கருத்து மாறுபாட்டை "ஊழல்" என்பது ஆராய்ச்சி உலகில்



சம்பந்தப்பட்டதல்ல. ஒரு தமிழ் நாட்டு அரச-ியல் வாதியே மனதில் வெறுப்போடு பயன்படுத்தும் வார்த்தை தந்து மற்ற புத்தகங்களிலும் சோழநாடன் இம்மாதிரியான வசைச் சொற்களையே தன்னில் வெறுப்பு மேலிடும் போது பயன்படுத்துகிறார். "கன்னட வெறியர்", "தெலுங்கரின் ஓலம்" "மலையாளிக-ளின் விதண்டாவாதம்", "குசுகுசுவென பாடும் சபாக்காரர்" என்ற பிரயோகங்கள் சோழநாடனின் பாராட்டத்தக்க ஈடுபாடுகளோடு ஒத்த குணம் பெற்றவை அல்ல. முற்றிலும் தரக் குறைவும் வெறுப்பு நிறைந்தவையும் ஆகும்.

அடுத்து இன்னொரு குறை. சோழ நாடன், புத்தகத்தின் முடிவில், பயன்பட்ட நூல்கள் என்று ஒரு பட்டியல் தருகிறார். ஆனால், புத்தகம் முழுவதும், எது எந்த இடத்திலிருந்து பெறப்பட்டது, எது அச்சில் கண்டது, எது யாருடன் கண்ட பேட்டியில் கூறப்பட்டது எது சோழநாடனின் சொந்த அபிப்ராயம், அந்த அபிப்ராயம் வந்த வழி என்ன என்று நாம் பிரித்துக் காணமுடிவதில்லை. எல்லாம் ஒன்றாக்கிக் குழப்பியுள்ளார். ஆனந்த விகடன், கல்கி என்று பட்டியலில் சொல்லிப் பயனில்லை. எந்த இதழ், வருடம் வாரம் என்ன என்று அந்தப் பக்கத்திலேயே அடிக்குறிப்பு தரவேண்டும். எது அவர் காற்று வழி கேட்டது, எது, என்று யார் பேட்டியில் சொல்லக் கேட்டது என்ற விவரமும் தேவை. எல்லாத்தையும் சகட்டு மேனிக்கு வேறுபடுத்தாமல், சர்ச்சைக்கிடமான, வசை, வெறுப்பின் உமிழ்வு என்று சொல்லத்தக்கவையை சொல்லிச் செல்வது அழகல்ல.

"தியாகய்யர் திருவையாறு சுப்பையா பிள்ளையென்ற நாகஸ்வர வித்வானிடம் தான் இசைபயின்றார் என்ற செய்தி, தற்காலத்தில் தியாகய்யரைப் பற்றி எழுதப்படும் வரலாறுகளில் இருட்டடிப்பு செய்யப்படுகிறது" என்று எந்த ஆதாரத்தில் எழுதப்படுகிறது?

## வெங்கட் சாமிநாதன்

இம்மாதிரி நிறையவே இருந்தாலும், இன்னொன்று மாதிரிக்கு. "அப்படிப்பட்ட இசைக்கலைஞரிடம் இருந்த குறையை பெரிது படுத்திக் காட்டுவது தமிழகப்பத்திரிகைகளுக்கு ஒரு விருந்து சாப்பிட்டது போல. ஆனால் டைகர் வரதாச்சாரி பிராந்திக்கு சைடிசான சுட்ட அப்பளம் சாப்பிட்டதைப் பற்றி எழுத மாட்டார்கள். இது தமிழகத்தைப் பிடித்த பீடை" - கலை உலகில் பெரிய மேதைகள் கூட குடிப்பழக்கத்திற்கு இரையாவது மிக மிக சகஜம். இதை யாரும் பெரிது படுத்துவதில்லை. அவர்கள் மேதையை யாரும் மறுத்ததில்லை. டைகர் மாத்திரமல்ல, மகாலிங்கம், மகாராஜபுரம், போன்றோரும் தான். இது உலகம் அறிந்தது. "இப்போ நான் மனிதனாகிப் போனேன்" என்று மதுவிலக்குப் பிரசாரம் செய்த என்.எஸ் கிரு'ணனும், குந்தன் லால் சைகல், மன்ட்டொ போன்ற எண்ணற்ற கலைஞர்கள்மிதமிஞ்சிய குடியினாலேயே தம் நீண்ட ஆயுளை பரிதாபகரமாகக் குறைத்துக் கொண்டனர். இது வருந்தத் தக்க வி'யம் தானே ஒழிய சாதியைப் புகுத்தும் தேவை ஏதும் இல்லை. ஒருவரைப் பற்றி, சொல்லப்படாத "இருந்த குறையை" என்பதும் மற்றவரிடம் இருந்த உலகறிந்த அதே குறையை, "மது அருந்தும்போது சுட்ட அப்பளம் சாப்பிட்டதை" என்று சொல்லும் சோழநாடனிடமே ஒன்றைச் சொல்லாமல் விடுவதும் மற்றதை பெரிதாக்கி குற்றப்பத்திரிகை வாசிப்பதிலுமே, பிரசாரமும், இருட்டடிப்பும் செயல்படுவதைப் பார்க்கலாம்.

பாவம் இவ்வளவு பெரிய மேதை அடுத்தடுத்து ஆவலான எதிர்பார்ப்போடு ஐந்து திருமணங்கள் செய்து கொண்டபோதும், புத்திர பாக்கியம் இல்லாது போன சோகம் தான் தன்னைக் குடிப்பழக்கத்தில் ஆழ்த்தியது என்று ராஜரத்தினமே சொல்லியிருக்கிறார். அது எப்படியெல்லாம் உபயோகப்படுகிறது அவரவர் விருப்பு வெறுப்புகளைச் சார்ந்து!




**காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலை கனடா கிளை**


மேற்படி சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் தங்கள் குடும்பத்தாருடன் கோடைகால ஒன்றுகூடல் செய்வதற்காக முதன்முறையாக அங்குரார்ப்பண கூட்டம் நடை-பெற உள்ளது. தயவு செய்து சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்த ஊழியர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இடம் - 32 Kessack Cet. Scarborough, ON, M1B 1k6
காலம் - யூலை 15, 2006 4.00 மணி
தொடர்புகளுக்கு - திரு. வி. இரட்ணராஜா- 724.1255
திரு. அ. கதிர்காமத்தம்பி - 416-293.1399
திரு. ந. மகேந்திரன் - 416.754.4864

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த ஒன்று கூடல் 2006**

இடம் - Neilson Park (Neilson Rd. & Finch சந்திக்கு அருகாமையில்)
காலம் - யூலை 08, 2006 (சனிக்கிழமை) 10.00 மணி மு.பகல்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
திருமதி. கமலா சந்திரன் 905.471.2229
திருமதி. பாலேந்திரா 416.755.1878
திருமதி. ராதிகா நிருபா 905.457.6786



**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - 416.230.1107

**PARAM GNANASWARAN**
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# கனேடிய தமிழர் உதைபந்தாட்ட அணி மாபெரும் வெற்றி

## விளையாட்டுத் தகவல்கள் 193

உலக கிண்ணப் போட்டிகளை ரசித்துக் கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்கு அல்வா சாப்பிடுவது போல் ஒரு இனிப்பான செய்தி!



யூன் 24ம்திகதி ESTHIER SHINER (NORTH YORK) ஸ்ரேடியத்தில் (மாபெரும் விளையாட்ரங்கு) ரொறொன்ரோவில் உள்ள ஆசிய உதைபந்தாட்ட அணிகளுக்கு கிடையிலான மாபெரும் சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் கொரியா, ஜப்பான், இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, சிங்கப்பூர் போன்ற பலநாட்டு அணிகள் மோதின. இச்சுற்றுப்போட்டியில் ரொறொன்ரோவில் இருந்து தமிழ் உதைபந்தாட்ட கழகங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அணியும் கனேடிய தமிழர் அணி என்ற பெயரில் இந்த ஆசியநாடுகளின் சுற்றுப்போட்டியில் மோதியது. பல ஆட்டங்களில் வெற்றி வாகை சூடி இறுதிப் போட்டியில் கொரியா அணியை மண்கவ்வ வைத்து 2006 ஆசிய உதைபந்தாட்ட சம்பியன் என்ற விருதை கனேடிய தமிழர் அணி வெற்றி கொண்டது. இதன் மூலம் ரொறொன்ரோ வாழ் தமிழ் சமூகத்தை பெருமைப்பட வைத்துள்ள கனேடிய தமிழர் விளையாட்டுதுறை (C.T.S.A) நிர்வாகிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆவார்.

## சொல்ல வெட்கமாய் இருக்கிறதே!

இங்கிலாந்து அணித் தலைவர் டேவிட் பெக்காம் தனது நாட்டுக்காக கோல் போடும் போதெல்லாம், இல்லையில்லை ஒன்பது மாதங்களுக்குப் பிறகு இங்கிலாந்தில் குழந்தை பிறப்பு அதிகமாகிவிடுகிறதாம்.

2002 உலக கோப்பைப் போட்டியில் ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக பெக்காம் கோல் போட்டதும் இங்கிலாந்தே உற்சாகம் அடைந்து அதைப் பல்வேறு விதங்களில் கொண்டாடியது. மகப்பேறு ஆய்வு அமைப்பு ஒன்று, ஆர்வமுடன் கவனித்தபோது, ஏராளமான பிரசவங்கள், கோல் போட்ட நாளை அடிப்படையாகக் கொண்டிருந்து தெரிந்தது.

சந்தேகம் எதற்கு என்று பிரசவித்த தாய்மார்களையே கேட்டது அந்தக் குழு. "ஆமாங்க... கால்பந்தில் பெக்காம் கோல் போட்டதை வீட்டில் மகிழ்ச்சியோடு கொண்டாடினோம். அப்பத்தான் கரு தரிச்சிச்சி" என்று ஒப்புக்கொண்டார்கள். இங்கிலாந்தில் ஒரு வழக்கம். பிறந்த நாள் வந்தால், புது வீட்டுக்குக் குடி புகுந்தால, பெக்காம் கோல் போடுவதைப் போல நாட்டுக்கே மகிழ்ச்சி அளிக்கும் சம்பவம் நிகழ்ந்தால் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள்.

### அவுஸ்திரேலியா VS இத்தாலி

உலகக் கோப்பையில் கெய்சர்ஸ்லாடனில் திங்கட்கிழமை நடந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 1 - 0 என வென்றதன் மூலம் அவுஸ்திரேலிய பயிற்சியாளர் கஸ் ஹிட்டிங்கை பழிதீர்த்துக் கொண்டுள்ளது இத்தாலி.

2002 இல் தென்கொரியாவில் உலகக் கோப்பை போட்டி நடந்தபோது தென்கொரியா அணிக்கு பயிற்சியாளராக இருந்தவர் கஸ் ஹிட்டிங்க். அப்போது இரண்டாவது சுற்று ஆட்டத்தில் தென்கொரியாவிடம் தோல்விகண்டு வெளியேறியது இத்தாலி. இரண்டாவது பாதியில் 10 வீரர்களுடன் இத்தாலி விளையாடியபோதும், அவுஸ்திரேலியர்களின் 'முரட்டுத்தனமான' ஆட்டம், இத்தாலியர்களின் உறுதியைக் குலைக்கமுடியவில்லை. இதன் மூலம் மூன்றாவது முறையாக தான் பயிற்சி அளித்த அணியை அரை இறுதிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற கஸ் ஹிட்டிங்கின் கனவு தகர்ந்தது. இதற்கு முன்னர் 1998 இல் நெதர்லாந்தையும், 2002இல் தென்கொரியாவை யும் கஸ் ஹிட்டிங்க் அரைஇறுதிக்குத் தகுதி பெற வைத்தது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணி சிறப்பாக விளையாடியது. முடிவில் வெற்றி பெற வேண்டும் என்ற வெறி இல்லாததே தோல்விக்கு காரணம். இருப்பினும் அவுஸ்திரேலிய அணி இந்த ஆட்டத்தில் மட்டுமல்லாமல், இதற்கு முந்தைய ஆட்டங்களிலும் விளையாடிய விதம் பெருமை அளிப்பதாகவே இருந்தது. இந்தப் போட்டிக்குப் பின் ஹிட்டிங்குக்கு அவுஸ்திரேலியாவுடனான ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது. இதன் பின்னர் ரஷிய அணிக்கு பயிற்சியாளராகிறார் அவர்.

சுவிற்சலாந்தின் சிறப்பு - லீக் ஆட்டங்கள் மட்டுமல்லாமல், இரண்டாவது சுற்றிலும் ஆட்ட நேரத்தில் எதிரணியை சுவிற்சலாந்து கோல் போடவில்லை. நாலு ஆட்டங்களில் ஒரு கோல்கூட வாங்காமல் போட்டியை விட்டு வெளியேறும் முதல் அணி என்ற பெருமையை சுவிற்சலாந்து பெற்றுள்ளது.

### மகனே ஒழுங்கா அடிடா விசிலை!!!

உலகமே ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டம் நெருங்கிவிட்டது. ஆட்டத்தின் எவ்விதமான சூழ்நிலையிலும் வீரர்களை மட்டுமல்லாது, ரசிகர்களின் வெறுப்பையும் சம்பாதிக்காத நடுவரான பியர்லுகி கோலினா இருந்தால் உலகக் கோப்பை போட்டி அமைப்புக்கு அதிகம் சிந்திக்காது. ஆனால் அவர் ஓய்வு பெற்றுவிட்டார். அதுதான் இப்போது ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி அமைப்புக் குழுவுக்கு எழுந்துள்ள புதிய தலைவலி.

2002ஆம் ஆண்டு யோகோஹாமாவில் (ஜப்பான்) நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஆடிய பிரேசில் ஜேர்மனி வீரர்களைக் காட்டிலும் கோலினா அதிகம் பேசப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. பழசைப் பேசி பிரயோசனம் இல்லை. புதுசுக்கு வாருங்கள். பேர்லின் நகரில் யூலை ஒன்பதாம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆயுதத்தை (விசிலை) கையில் எடுக்கப்போபவர் யார் என்பதுதான் தற்போதைய கேள்வி.

"எடுறா வண்டிய, கூப்பிடுறா பட்டாளத்தை, செலுத்துடா எதிரியை நோக்கி" என சினிமா நடிகர் வடிவேல் பாணியில் உலக கால்பந்தாட்டத்தில் முடிவு எடுக்க முடியாது. அப்புறம் நகைச்சுவைக்கும், வரலாற்றுக்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடும். ஜேர்மனியில் நடைபெற்றுவரும் உலகக் கோப்பை போட்டி காலிறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. ஆனால் இதுவரைஇல்லாத அளவு அதிகமான அட்டைகள் (மஞ்சள், சிவப்பு) இம்முறை பளிச்சிட்டுள்ளன.

போர்த்துக்கல் - நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது மட்டும் ஒன்றல்ல, இரண்டல்ல 16 அட்டைகள். அதில் நாலு பேர் வெளியேற்றம். அதாவது குறைந்த பட்சம் அடுத்த ஆட்டத்தில் அவர்கள் விளையாட முடியாது. அந்த ஆட்டத்தின் நாயகன் ரஷிய நடுவர் வாலன்டின் இவனோவ்தான்! ஆதலால் அவரையே இறுதி ஆட்டத்துக்கு விசிலைப் பிடிக்கச் சொல்லிவிடலாம் என்றால், உலக ரசிகர்கள் தலையில் கையை வைத்து விடுவார்கள்.



இந்நிலையில், யாரை நியமிக்கலாம் என்பது குறித்து முடிவெடுக்க உலகக் கோப்பை போட்டி நடுவர்கள் குழு கூடுகிறது. இறுதி ஆட்டத்தின் போது மட்டுமல்லாது, வரும் 30ஆம் திகதி முதல் நடைபெறும் ஆட்டங்களையும் அடிதடி இல்லாமல் நடத்திச் செல்லும் கைங்கரியம் உள்ள நடுவர்கள் யார், யார் என்பதை கூடிப்பேசி தேர்ந்தெடுக்க உள்ளது. இதுவரையிலான போட்டிகளில் ஆயுதத்தைக்கையில் எடுத்தவர் களில் இறுதிப் போட்டியை வழிநடத்தும் தகுதி இவருக்கு உண்டு என எளிதாகக் கூற முடியுமா என்றால், இல்லை என்பதே கால்பந்து வல்லுநர்களின் கருத்தாக உள்ளது.

### போர்த்துக்கல் VS நெதர்லாந்து

போர்த்துக்கல், நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் போடப்பட்டதென்னவோ ஒரு கோல்தான். ஆனால் 16 மஞ்சள் அட்டைகளும் நாலு சிவப்பு அட்டைகளும் காட்டப்பட்டன.

நெதர்லாந்து வீரர்களுக்கு ஏழு மஞ்சள் அட்டைகளும், இரண்டு சிவப்பு அட்டைகளும் காட்டப்பட்டன. போர்த்துக்கல் வீரர்களுக்கு ஒன்பது மஞ்சள் அட்டைகளும் இரண்டு சிவப்பு அட்டைகளும் காட்டப்பட்டன. போர்த்துக்கல் அணியின் மணிச்சே ஒரே ஒரு கோல் போட்டார். அதனால் இங்கிலாந்துக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல் ஆடவிருக்கிறது.

ஜேர்மனியில் நடைபெறும் உலக கோப்பை கால்பந்து போட்டியில் இதுவரை இருந்திராத வகையில், ஆட்டக்காரர்கள் நேருக்கு நேர் "மோதிக்கொண்ட" ஆட்டம் என்றால் அது இதுதான் என்ற முடிவுக்கு ரசிகர்களே வருவார்கள். ஆனால் நடுவர் வாலன்டின் கார்டுகளை சற்றுத் தாராளமாகவே காட்டிவிட்டார் என்பது தான் ஸ்கொலாரியின் கோபம். ஓரளவுக்கு அது நியாயமும் கூட. கால்பந்து என்றாலே இப்படி எதிராளியைத் தள்ளுவது, காலை இடற வைப்பது, ஓட முடியாமல் பிடித்து இழுப்பது, மேலே போய் விழுவது எல்லாம் சகஜம். இதுவரை நடந்த மோதல்களிலேயே மோசமானது இத்தாலியின் நடுக்கள வீரர் டேனியல் டி ரோசி, அமெரிக்காவின் பிரையன் மெக்ஃபிரைடை முகத்தில் இடித்ததுதான். அதற்காக அவருக்கு நாலு ஆட்டங்களில் பங்கேற்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பப்லோ மஸ்திரோனி, எட்டி போப் ஆகிய இத்தாலி வீரர்களுக்கும் சிவப்பு அட்டைக்குள்ளானார்கள்.

**எஸ். கணேஷ்**

### கிரிக்கெட் - இலங்கை அணிக்கு மாபெரும் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருதின துடுப்பாட்ட போட்டியிலும் வெற்றி பெற்று, தொடரைக் கைப்பற்றியுள்ளது இலங்கை அணி.

இங்கிலாந்தில் உள்ள ரிவர்சைடில் நடைபெற்ற ஆட்டத்தில் எட்டு விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது இலங்கை அணி. 262 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி பெறலாம் என்ற இலக்குடன் ஆடிய இலங்கை அணி, எட்டு ஓவர்கள் மீதமிருக்கையில் இரண்டு விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

அணித்தலைவர் மஹேல ஜயவர்தனே வெற்றியில் முக்கியப் பங்காற்றினார். அவர், 126 ஓட்டங்களைக் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். விக்கெட் கீப்பர் சங்கக்காரா 58 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ஜயவர்தனே வுக்கு இது ஏழாவது சதமாக அமைந்தது.

மீண்டும் நாலாவது ஆட்டத்தையும் இலங்கை அணி கைப்பற்றியுள்ளது. மீண்டும் ஜயவர்த்தனே எட்டாவது சதத்தை அடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






# Real Estate முதலீட்டில் ஈடுபடும்போது...

Real Estate இல் முதலிடும்போது அதாவது வீடு, கொண்டோமெனியம், வியாபாரம், நிலம், கட்டிடம் போன்ற பலவழிகளில் முதலிட முடியும். Real Estate முதலீட்டில் ஈடுபடுபவர்களில் அனேகமானவர் கள் முதலாவதாக முதலிடுவது வாழும் இடம் (Primary Residental Home) வாழுவதற்காக வாங்கப்படும் வீடும் ஒருவகை நிலையான சொத்து முதலீடே. மாதமாதம் கொடுப்பனவு செய்யும்போது ஒரு பகுதி முதலை நோக்கி செல்வதால், எமக்காக ஒரு பகுதியை மாதமாதம் சேமிக்கும் நிலைமைக்கும் தள்ளப்படுகின்றோம். வீட்டு சொந்தக்காரரின் நெருக்குதலிற்கு ஒருவகையில் விடுதலை. இதன் அடுத்தபடியாக வாடகை கொடுப்பதற்காக இல்லங்கள் வாங்குகின்றோம். இதுவும் முதலீடே. இதில் வாடகைக்காரரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வீட்டு முதலாளியாக தொழிற்படுதல் ஓரளவு வாடகைக்காரரின் பணத்தில் அடமானத்தொகை போன்ற செலவைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இதுவரை வேறு ஒருவரின் இடத்தில் தமது வியாபாரத்தை செய்கின்ற பலர் மாதமாதம் வாடகைப்பணம் கொடுக்கும் பணம், வீணாக விரயமாகின்றது. ஆரம்பத்தில் வியாபாரம் தொடங்கும் போது சொந்த இடத்தில் வியாபாரம் தொடங்குவது அவ்வளவு இலேசல்ல. உதாரணமாக ஒருவர் மாதமாதம் $5000 தனது வியாபாரநிலையத்திற்கு வாடகை செலுத்துவதாகக் கொண்டால் இவர் கடந்த (பத்து) 10 வருடமாக இந்த வியாபாரத்தை நடத்துபவராகவும் இருந்தால், இவரினால் கொடுத்த வாடகைப்பணம் $600,000 ஆகும். கொடுக்கப்பணம் அப்பணம் விரயமானதாகவே கருத வேண்டும். வியாபாரம் செய்யும் கட்டிடம் சொந்தமாக இருந்தால், கொடுக்கப்பட்ட வாடகைப்பணத்தில் ஒருபகுதியாவது முதலாக மாறியிருக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே சொந்த வியாபாரம் செய்பவர்கள், இனிவருங்காலங்களில் தமக்கென சொந்த வியாபார நிலையத்தை வாங்குவதைப்பற்றி தகுந்த ஆலோசனை பெறுவது எதிர்காலத்தில் பலன் கொடுக்கலாம். எதற்கும், இந்த துறையில் அனுபவமிக்கவ ரிடம் தகுந்த அறிவைப்பெற்று அதற்கேற்ப நடப்பது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தவிர்க்க கூடியதாக இருக்கலாம். நம்மில் பலர் 1980களின், இறுதியிலும், 1990களின் ஆரம்பத்திலும் தொழில் ஆரம்பித்தவர்களில் அனேகர் அதே இடத்தில் வாடகையைச் செலுத்திக் கொண்டு வியாபாரம் செய்வதால் வாடகைப்பணம் தொடர்ந்து செலுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட இடத்தில் வியாபாரத்தை ஆரம்பித்த பலரின் வியாபாரம், அந்த இடத்தில் சிறப்பாக நடைபெ-பற்று வருவதால், இடத்தை மாற்ற நினைப்பதில் சஞ்சலம் வருவது நியாய மானது. ஆனால் இதன் மறுதலையாக, கட்டிடத்தின் முதலாளிக்கு இந்த நிலைமை புரியும், இதனால் வாடகை அதிகரிப்பிற்கும் சந்தர்ப்பம் உண்டு. இந்த நிலையை எவ்வாறு சமாளிக்கலாம்.

எனவே தொழில் நடத்துபவர்கள் இதனைச் சிந்தித்து அதற்கேற்ப தமது நிலைமையை சீர்செய்வது நல்லது. பொதுவாக வியாபாரம் நடத்துபவரிற்கு கட்டிடம் சொந்தமாக இருப்பின், காலத்துடன், கட்டிடத்தின் அடமானம் கொடுப்பனவு செய்வதால், கட்டிடம் சொந்தமாக வரக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

உலகிலுள்ள பணக்காரர்களில் அனேகர் Reas Estate முதலீட்டினாலேயே பெரும்பணக்காரர்களாக உருவானவர்கள் என்பது உலகம் அறிந்த உண்மை.

அடுத்ததாக பார்ப்பது; சொந்தமாக முதலீடு செய்வது வியாபாரம் நடாத்துவது அல்லது வருமானம் வரக்கூடிய கட்டிடங்கள், வியாபாரங்கள் வாங்குவது அதாவது வியாபாரக் கட்டிடங்கள் வாங்கி வாடகைக்கு கொடுத்தல் போன்றவை.

பொதுவாக, ஒரு வெற்றிகரமான முதலீடாக இருக்க சில விடயங்களை கவனத்திலும், கணக்கிலும் கொள்ளுதல் வேண்டும்.

**1. மொத்தவருமானம்** (Potential Gross Income (PGI) வருடத்திற்குரிய மொத்த வருமானம் அதாவது குறிப்பிட்ட கட்டிடம் முற்றாக நியாயமான வாடகையில் வாடகைக்கு கொடுத்தால், எவ்வளவு மொத்த வருமானம் கிடைக்கும்.

2. Vacancy Rate, BadDebts இற்குகன ஒருவகை கழிவு செய்தல் வேண்டும். பொதுவாக 100% வாடகைக்கு தொடர்ந்து கொடுப்பது இலகுவல்ல. மேலும் அறவிடமுடியாத சில வாடகைகளையும் கணக்கில் கொள்ளுதல் வேண்டும். இதற்காக வருமான கழிவுதரல் வேண்டும்.

**3. நிச்சயமாக கிடைக்கும் வருமானம்.**
மொத்தவருமானத்திலிருந்து, வெற்றிடத் திற்கும். மற்றும் அறவிடமுடியாத கடனிற்கு மான தொகையை கழிப்பதால் வருவது. அதாவது உண்மையாக வருட வருமானம் மொத்தவருமானம் - கழிவுவருமானம்.
Effectiv Income = Potential Gross Income - (Vacancy+Bad debts)

**4. மொத்த செலவுகள்** (Expenses Adjustments)
உதாரணமாக Snow Removal Contract, Electricity Bill, Taxes, Gas Bill, Water Bill, கட்டிடத்திற்குரிய காப்புறுதி செலவு....போன்ற செலவுகளைக் கணக்கில் கொள்ளல் வேண்டும்.

கட்டிடத்தின் பராமரிப்பிற்கான செலவுகளாக ஒரு சிறுபகுதி சேமித்தல் வேண்டும்.

உதாரணமாக Windows, Doors..போன்ற செலவுகள் மற்றும் தொழில்புரிபவர்கள் செலவும், நிதி நிறுவனத்தின் மாதாந்த செலவுகள்...

5. Effective Net Income
வரஇருக்கும் வருமானத்திலிருந்து செலவு களை கழிப்பதால் வருதல் Net Income ஆகும். இந்த வருமானத்திலிருந்து எவ்வளவு தொகையை முதலீட்டால் எவ்வளவு வரு மானம் கிடைக்கும் எனக்கணக்கிட முடியும்.

கீழேயுள்ள உதாரணத்தைப் பார்ப்போம்.
பாலா என்பவர் $100,000 ஐ முதலிட்டு ஒரு வியாபாரக் கட்டிடத்தை வாங்குவதாக கொள்வோம். வாங்கிய கட்டிடத்தின் விலை $350,000. எனவே எடுக்கப்பட்ட அடமானத்தின் பெறுமதி $250,000. இதனால் வரும் வருட வருமானம் $4100 (சகல செலவுகளிற்குமான கழிவுகளிற்கும் பின்னர் கிடைப்பது. அதாவது

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

### தொடர்-2 3 1

Net Income) ஐந்து வருடங்களின் பிற்பாடு, இந்த கட்டிடம் $390,000 விற்பதாக இருந்தால், அப்பொழுது இருக்கும் அடமானத் தொகை $215,000 எனவும் கொண்டால், கிடைத்த ஆதாயம் (390,000- 215,000 விற்க, வாங்குவதற்கான செலவு $25,000 - $100,000 (முதலிட்டது) = $50,000. எனவே மொத்தமாக கிடைத்த வருமானம் 50,000.

ஐந்து வருடத்தில் கிடைத்த ஆதாயம் $50,000 ஆகக் கொள்ளலாம். இந்த உதாரணம், பொதுவாகக் காட்டப்பட்ட ஓர் உதாரணமாகும். எனவே முதலீடு என்று ஒன்று வரும்போது நாம் தகுந்த முறையில் கணக்கிடுதல் வேண்டும். ஒவ்வொரு செலவுகளையும் நுணுக்கமாக கணக்கிடுதல் வேண்டும். இடமும் (Location) முக்கியம் என்பதையும் கவனிக்க.

ஒருவர் முதலீடு செய்ய விரும்பின், அந்த தொழிலில் அனுபவமிக்கவரின் தகுந்த ஆலோசனையை பெற்று அவரின் ஆலோசனையுடன் முதலிடுவதே சிறந்த பலனைக் கொடுக்கும்.

தகுந்த முதலீடு செய்யும் போது விருப்பு வெறுப்பிற்கு இடம் தருதலை தவிர்ப்பது நல்லது.




Brimley/Finch
Link House- 2- Storey
3+1 Bedrooms, 2 Washrooms,
Updated kitchen, washroom,
TTC, School



Finch & Morningside
-Linked 2- Storey
3 Bedrooms, 2 Washrooms, Lots Of Upgrades
Enclosed Porch. Fully Fenced Back Yard,
Widen Driveway
TTC, School



Morningside/Mclevin
Detached 2- Storey
3+1 Bedrooms, 3 Washrooms, $$$ upgrades
Well Maintained Spacious Home In A
Good Location,Finished Bsmt With
One Br And Kitchen



Steels/9th Line
Brand New Semi-Detached 2- Storey
4 Bedrooms, 3 Washrooms, $$$ upgrades
Walkout Basement, 9 Four New Appliances
Harwood Floor

HOMELIFE HIGHER STANDARDS


TRIDEL PROJECT "AccoladE"
LUXURY CONDOMINIUM
DONMILLS & EGLINTON

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397



HOMELIFE/GTA Realty Inc.,Brokerage*
1711McCowan Rd, Suite 206, Toronto, ON, M1S-3Y 3., Office: 416-321-6969
145 Traders Blvd., Suite 28, Mississauga,ON,. Office: 905-712-2666
*Independently Owned and Operated
S&S Art.

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling



Nantha Aiyadurai
Cell: 613 850 9931
Business: 613 823 7555 Fax: 613 825 8177
3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

Relocation Service
Available

COLDWELL BANKER
COBURN REALTY

Centretown/Somerset mews



3STOREY
Fabulous end unit townhouse
in quiet neighborhood.
Huge 4 bedrooms with
2 bathroom, hard wood floor
Asking Only:$359,900
S&S Art.

# மக்களின் தமிழ்மொழிப் பயன்கண்டு தமிழ்மொழிப்பணியை நிறைவோடு செய்வதாக நாம் எண்ண முடியாது

## ஒற்றுமை

தமிழர் நடுவில் ஒற்றுமையை கட்டிக்காக்க நாம் அனைவரும் உண்மையாக உழைக்க வேண்டும். அதாவது நான் என்ற செருக்கை விட்டு விட்டு தமிழ்மொழி என்ற பொதுப்பணியில் ஒன்றிணைய வேண்டும். தமிழர்களை தமிழர் செல்வந்தராக்க உறுதுணை புரிய வேண்டும். தமிழருடைய திறமை, ஆற்றல்களை பாராட்ட வேண்டும். திறமை, ஆற்றல் நிறைந்தவர்களை ஏனைய மக்களுக்கு இனம் காட்ட வேண்டும். கருத்துக்களை மதித்தல், மாந்த நேயத்தோடு ஒருவரோடு ஒருவர் அன்பாக பழகுதல், தமிழரைக் கண்டால் சிரித்த முகத்துடன் நலம் அறிதல், கருத்தில் தர்க்கம் புரியும் நண்பரோடு அன்பாக பழகுதல் இவைகள் ஒற்றுமையை வளர்க்க பயன்படுத்தும் கருவிகளாகும். ஒற்றுமைக்கு இணையாக சமரசம் என்ற வடமொழிச் சொல்லையும் நாம் குறைந்தளவில் பயன்படுத்தி வருகிறோம்.

## மணவழியுறவு

இது திருமணத்தின் வழியால் வரும் உறவு. இவ்வுறவு மகிழ்ச்சி நிறைவோடு வருகின்ற உறவாக கருத முடியும். மணவழியுறவு என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையாக நாம் அனைவரும் பயன்படுத்தும் வடமொழிச் சொல் சம்பந்தி ஆகும். இனி மணவழியுறவு என்ற தமிழ்ச் சொல்லை பயன்படுத்த முடியும்.

## மிகவும் நன்று

மிகவும் நன்று என்று பள்ளிப் பிள்ளைகளுக்கு தங்கள் படிப்பின் திறமையால் ஆசிரியரிடம் இருந்து கிடைக்கும் வாழ்த்து ஆகும். அளவுக்கு அதிகமாக கிடைக்கும் பயனை அல்லது வெற்றிக்குரிய செயலை மிகவும் நன்று என்று சொல்லலாம். ஆனால் எமக்கு பழக்கத்தில் உள்ள வடமொழிச் சொல் சபாசு ஆகும்.

## வெளுக்கை

இன்று மக்களை விரைவாக சென்றடையக்கூடிய ஊடகங்களில் வானொலி மிக சிறப்பானதாகும். வானொலி கேட்டுக் கொண்டு இன்னொரு வேலையைச் செய்ய முடியும். புலம்பெயர்ந்த தமிழர் நடுவில் பல வானொலிகள் தமது பணியை மக்களுக்கு வழங்கினாலும் எமது உடுப்புக்களை வெளுக்கச் செய்தல் மிகத் தேவையானதாகும். நாம் வெளுக்கை என்ற சொல்லை பயன்படுத்தாமல் சலவை என்ற வடமொழிச் சொல்லையே பயன்படுத்தி வருகின்றோம். துப்பரவு நலம் தரும் என்ற பழக்கத்திற்கமைய உடுப்புக்கள் அழுக்கில்லாமல் வைத்திருப்பதால் உடல் நலம் பெறும்.

## நல்லளிப்பு

உயர்ந்தோரின் பெயரில் ஒரு செயலை மக்களுக்கு நல்லளிப்புச் செய்தல். அல்லது ஒருவரின் நினைவாக விரும்பிய பொருளை இல்லாதவருக்கு நல்லளிப்பு செய்தல். நல்லளிப்பு என்பதற்கு இணையாக நாம் சமர்ப்பணம் என்ற வடமொழிச் சொல்லை பயன்படுத்தி வருகின்றோம்.

## நிகழ்ச்சி

புலம்பெயர்ந்த நாம் பலவகையான நிகழ்ச்சிகளை காண்கின்றோம் பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றோம். ஆனால் இத்தகைய நிகழ்வுகள் எந்தளவுக்கு இனம், மொழி, அரசியல், சமய, பொருண்மிய வழியில் அறிவு சார்ந்த செயலில் நாம் எங்களை ஈடுபடுத்திக் கொள்கிறோம். உரிமைக்குரல் நிகழ்வு ஒட்டு மொத்த தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இந்த உரிமைக்குரலை கனடா ஆங்கில ஊடகங்கள் இருட்டடிப்பு செய்தமைக்கு நாம் கவலைப்பட்டிருக்கிறோம். இருட்டடிப்பை முறியடிக்க தமிழர் தரப்பு என்ன செய்வதாக எண்ணுகின்றது. இந்த ஆங்கில ஊடகங்களின் இருட்டடிப்பு மற்றும் தவறான பரப்புரையை புலம்பெயர்ந்த தமிழரால் கனடாவில் இல்லாமல் செய்வதற்கு வல்லமை நிறைந்த ஆங்கில ஊடகம் ஒன்றை எமது தரப்பினர் ஆரம்பிக்க பின்னடிப்பது ஏன்? இவ் ஊடகம் வேற்றுமொழி பேசுகின்ற மக்கள் நடுவில் தவழ விட வேண்டும். நாம் நிகழ்ச்சி என்பதை பயன்படுத்தினாலும் சம்பவம் என்ற வேற்று மொழிச் சொல்லையும் அடிக்கடி பயன்படுத்துகிறோம்.

## ஆட்சிக்குழு

அமைப்புக்களில் ஆட்சிக்குழு மிக முதன்மையாகும். ஆட்சிக்குழுவில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களை உள்ளடக்கியது. இவர்கள் தான் அந்த அமைப்பின் நன்மை தீமைக்கு முழுமையான பங்கில் செயல்படுகின்றனர். ஆட்சிக்குழு உறுப்பினர் பொதுப்பணி என்பதை மனதில் வைத்து செயல்பட வேண்டும். அமைப்புக்களால் மக்கள் நன்மை பெற வேண்டும். அதே போல அமைப்பின் வளர்ச்சி கண்டு மக்கள் பேராதரவு வழங்குவர். ஆட்சிக்குழு என்ற தமிழுக்கு இணையாக நாம் அனைவரும் நிர்வாகம் என்ற வடமொழிச் சொல்லையே பயன்படுத்தி வருகின்றோம். இது எமது மனதில் பெரிய துன்பமாக இருக்கின்றது.

## இன்பந் தரும் இனிய ஒலிபரப்பு

இன்பம் தரும் இனிய ஒலிபரப்பு என்று சொல்வதற்கு இணையாக வடமொழிச் சொல்லான சனரஞ்சக ஒலிபரப்பு என்று வானெலிகள் சொல்லுகின்றன. இன்பந் தரும் இனிய இசை என்பதற்கு இணைவாக சனரஞ்சக இசை என்றும் சொல்வது எமது வழமை.

## அச்சம்

தமிழீழ மக்கள் இன்று அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அச்ச நிலையை இலங்கை அரசோ அல்லது அனைத்துலக நாடுகளோ கவலைப்படாமல் செயல்படுகிறார்கள். இந்த நிலையை நாங்கள் எப்போது மாற்றுவோம். அச்சம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு பீதி என்ற வடமொழிச் சொல்லை நாம் பயன்படுத்தி வருகிறோம்.

## பெருந்தகைமையர், பெருஞ்சிறப்பாளர், பெரியர்

பெருஞ்சிறப்பாளர் பல விழா மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்கு கலந்து சிறப்பிப்பார். பெருந்தகைமையர் சிறப்பு நிகழ்வுகளில் சிறப்புரையாற்றுவார்கள். பெரியர் பலர் தமிழ் நிகழ்வுகளில் கலந்து நல்லறிவுரைகளை வழங்குவார்கள். இந்தச் சொற்களுக்கு இணையாக பிரமுகர் என்ற வடமொழிச் சொல்லையே நாம் வழமையாக பயன்படுத்துகிறோம்.

கருத்துக்கள் வரவேற்கப்படுகிறது. தொடர்புக்கு: Thamil-@hotmail.com

*தமிழ்ச் சொற்களோடு மீண்டும்*
*தமிழேந்தி*

---


## பொய்கை

www.poikai.com இணையதளத்தில் புதியதோர் சஞ்சிகை.

(கலை, இலக்கிய, ஆன்மீக, மருத்துவ காலாண்டு இதழ்). இவ்விணையத்தள சஞ்சிகை "பொய்கை" எனும் பெயரில் வாசக நெஞ்சங்களில் புதுமணம் பரப்ப இலக்கியப் பூக்களை அள்ளிவருகிறது. இந்த இதழ் தொடக்கம் ஒவ்வொரு காலாண்டுக்கும் இப்பொய்கை இதழ் இணையத்தளத்தில் வெளிவரவிருக்கிறது. வாசகர்களுக்கு நிறைவைத்தரும் புதிய ஆக்கங்களை பொய்கை வரவேற்கிறது.


*அன்புக்குரிய வாசகர்களுக்கு!*

*முத்துராஜாவின் 60 கவிதைகள் அடங்கிய "சுனாமி" எனும் கவிதைத் தொகுப்பு விரைவில் உங்களுக்குக் கிடைக்க உள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.*

# தமிழ் மொழிக் கிழமை

**பாடல்**

பல்லவி

எங்கு நிற்கின்றாய் எண்ணிப்பார் தமிழா-நீ
நின்று நினைத்துப்பார் நேற்றைய வாழ்வை

அனுபல்லவி

நிலையாத சொத்துக்காய் நித்தமும் அலையும்நீ
விலையென்ன கொடுத்தோமெம் தமிழுக்காய்த் தட்டிப்பார்

சரணம்

பைந்தமிழைப் பாலகர்க்கு புகட்டிட மறக்கின்றாய்
செந்தமிழிங் கெதற்கென்று சொந்தமொழி யொதுக்குகின்றாய்
வெந்துவாடி வந்தநிலை விரைந்துமே நீமறந்தாய்
சொந்தமேநீ மறந்தால் செந்தமிழ்தான் என்னாகும்?

பரம்பரைவழிவந்த பண்பாடு பறக்கவிட்டாய் - தமிழன்
சிரம்தாழ்த்தும் சிறப்புக்கள் அத்தனையும்நீ மறந்தாய்
அடையாளம்நீ தொலைத்து அலையவா துடிக்கின்றாய்?
கடையரே காத்திடுவீர் கன்னித்தமிழ் கண்போல!

மலையென மாவீரர்சிலையங்கு பெருகுதுபார்
மழலையும் வெறியரால் மடிந்திடும் துயரம்பார்
தரணியெலா மகதிநிலையேன் நாமடைந்தோம்
தமிழனே எண்ணிப்பார் எம் தமிழ்காக்கவல்லவா?

\- அருட்கவி ஞானகணேசன்

# கறுப்புப் பணம்

*நுளம்புத் திரியை உற்பத்தி செய்யும்*
*தொழிற்சாலைகளின் முதலீடு*
*நிலக்கீழ் கழிவு வடிகால் அமைத்து*
*நுளம்புக்கூட்டத்தை ஒழிப்பதற்குப்*
*போதும் என்று நம்பத்தோணும்*

*காடு வளர்ந்த காணி நிலங்களில்*
*தூக்கி வீசப்படும் குப்பைக் கழிவுகள்*
*கத்திக்கொண்டு ஓடும் சொறி நாய்கள்*
*படுத்துக்கிடந்து சிறிய வாலை ஆட்டும்*
*பீப்பன்றிகளில் மொய்க்கும் கொசுக்கள்*

*ஒரு Car செல்லக்கூடிய ஊர்த்தெருவில்*
*பயணிக்கும்*
*மோட்டார்ச் சயிக்கில்கள் மிதிவண்டிகள்*
*தள்ளு வண்டில் வியாபாரிகள்*

*விலத்தாமல் நிரையாக நடந்து செல்லும்*
*சினிமா வில்லன்போன்ற இளைஞர்கள்*

*முச்சந்தியில் குறுக்கே நிற்கிறது*
*ஓர் சிவத்தப் பசு*
*யாராவது*
*அதில் முட்டிமோதித் தட்டிவிட்டால்*
*மூக்குடைய வாங்கவேணும் தர்ம அடி*

*கொப்பு விட்டுக் கொப்புக்குத் தாவும்*
*வாலில்லாத அரசியல் பொம்மைகள்*

*கிடாய் ஆடுகளின் கழுத்துகளில்*
*பூ மாலைகள் அலங்கரித்துக்*
*கதறக் கதற*
*இழுத்துச் செல்கின்றனர்*

*காவல் வைரவருக்குப் பலி கொடுக்கும்*
*கொண்டாட்டச் சடங்கு நோக்கி*

*சுயநலத்துக்கும் பொது நலத்துக்கும்*
*இடையில்*
*நடைபெறுகின்றன*
*கயிறிழுவைப் போட்டிகள்.*

முத்துராஜா



# காத்திருப்பது

பிபிசியின் படப்பிடிப்பு குழுவில் இருந்த ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் இந்தியாவைப் பற்றி ஆச்சரியப்பட விடயம் இருந்தது. எனக்கு அது மதுரையில் கிடைத்தது. பிபிசி ரீம் மதுரை வீதிகளில் படப்பிடிப்பை நடத்தியபோது சனக்கூட்டம் எக்கச்சக்கமாக சேர்ந்துவிட்டது. இந்தியாவில் எங்கே போனாலும் இது தவிர்க்கமுடியாத அம்சம். காமிராக்காரரையும், இயக்குனரையும் நெருக்குப் படாமல் காப்பாற்றுவதில் சில மதுரைவீரர்கள் எங்களுக்கு மும்முரமாக உதவினர்.

நாங்கள் எடுத்தது விவரணப் படம். எங்கள் குழுவில் இரண்டு இளம் பிரிட்டிஸ் பெண்கள் இருந்தார்கள். இருவருக்கும் நீண்ட பொன் முடி. பலர் அவர்களை நடிகைகள் என்று நினைத்து மொய்த்தார்கள். உண்மையில் அவர்கள் படப்பிடிப்பு உதவியாளர்கள்தான்.

படப்பிடிப்பு மும்முரமாக நடந்தபோது ஒரு நடுத்தர வயதானவர் எங்கோ வேகமாக சைக்கிளை மிதித்து போய்க்கொண்டிருந்தார். சைக்கிள் ஹாண்டில் பாரில் ஒரு பை தொங்கியது. ஏதோ அவசரமான வேலைக்கு போனவர் கூட்டத்தை கண்டதும் சடேரென்று பிரேக் பிடித்து, சைக்கிளை தொப்பென்று தரையிலே போட்டுவிட்டு சனக்கூட்டத்துக்குள் ஓடி வந்தார். வட்டத்துக்குள் நுழைந்தவர் அனுமதிக்கப்பட்ட ஆகக்குறைந்த தூரத்தில் நின்று படப்பிடிப்பை பார்த்தார். படப்பிடிப்பு ஓர் இரண்டு மணிநேரம் அங்கே நடந்தது. இந்த மனிதர் அசையவேயில்லை. சைக்கிளும் படுத்த படுக்கையிலேயே கிடந்தது. படப்பிடிப்பு முடிவுக்கு வந்ததும் இவர் போய் சைக்கிளை நிமிர்த்தி எடுத்தார். ஏறி உட்கார்ந்து ஒன்றுமே நடக்காததுபோல வந்தமாதிரியே மிதித்துக் கொண்டு புறப்பட்டார்.

ஏதோ முக்கியமான வேலையாகப் போன ஒருத்தர் எப்படி அந்த வேலையை ஒதுக்கிவிட்டு இரண்டு மணித்தியாலம் காத்திருந்தார். இவர் அவசரமாக தன் தாயாருக்கு ஒரு மருந்து வாங்க போயிருக்கலாம். அல்லது சொந்த மகளின் திருமண விசயமாக அலைந்திருக்கலாம். அல்லது சம்பளம் தரும் முதலாளி கொடுத்த ஒரு வேலையை நிறை வேற்ற விரைந்திருக்கலாம். ஒருவித தயக்கமும் இன்றி தான் செய்யவேண்டிய முக்கியமான வேலையை ஒத்திவைத்துவிட்டு படப்பிடிப்பை பார்த்தார். இந்த இரண்டு மணித்தியாலக் காத்திருப்பு அவருக்கு ஒரு பொருட்டே அல்ல.

இந்தியா முழுக்க காத்திருப்பது ஒரு சடங்கு போலவே நடந்தது. ஆரம்பத்தில் எரிச்சல்பட்ட நாங்கள் போகப்போக எங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டோம். ஐஸ்வர்யராய் இன்னும் ரெடியாகவில்லை. அவருடைய உதவியாளர் எங்களை காத்திருக்கச் சொன்னார். நாங்கள் போனபோது அவர் ஒரு விளம்பரப் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தார். ஒப்பனைப் பெண் ஒவ்வொரு இரண்டு நிமிடமும் அவருடைய ஒப்பனையை சரிபார்த்தார். நேரம் ஓடிக்கொண்டே இருந்தது.

ஐஸ்வர்யராயிடம் சகல வசதிகளும் பொருந்திய ஒரு வாகனம் இருந்தது. அடிக்கடி அதற்குள்ளே போய் ஒளிந்துகொண்டார். அந்த வாகனம் ஒரு குட்டி வீடு போல என்றே சொல்லலாம். அங்கே இளைப்பாறலாம் படுக்கலாம் ஒப்பனை சரிபார்க்கலாம். பாத்ரூம் சமாச்சாரங்களை முடித்துக்கொள்ளலாம். படப்பிடிப்பு இடைவேளைகளில் அவர் ஓய்வெடுப்பது அங்கேதான்.

நாங்கள் காத்திருந்தோம். எங்கள் குழுவின் தலைவர் பட்டி ஸ்மித் கோபப்பட்டு நான் கண்டதில்லை. அவருடைய மூச்சுக் காற்று வேகமாக வந்தது. ஒரு கட்டத்தில் அந்த ஓசை பஸ் பிரேக் போடும்போது எழும் உறிஞ்சும் சத்தம்போல பெரிசாக கேட்டது. அவருடைய கோபத்தை பொருட்படுத்தாமல், அரை மணி நேரம் மட்டுமே என்று எங்களிடம் அறிவித்த விளம்பரப் படம் இழுத்துக்கொண்டே போனது. நாலு பக்கத்திலும் இருந்து பாய்ந்த ஒளி வெள்ளத்தில் ஐஸ்வர்யராய் நடித்தபோது ஓர் இடத்தில் சிரித்தார். அப்போது அவரை சுற்றியிருந்த வெளிச்சம் கொஞ்சம் மங்கியது. அப்போதுதான் நான் நினைத்தேன் இவர் உண்மையிலேயே ஓர் அழகான பெண்தான் என்று.

ஒரு சுழல் கதிரையில் ஐஸ்வர்யராய் காலுக்குமேல் கால் போட்டுக்கொண்டு முழுக்கையையும் வளைக்காமல் நீட்டினார். நீண்ட விரல்கள் அத்தனையும் என் கைக்குள் அடங்கின. அவை குளிர்ச்சியாகவும் இருந்தன.. அவருடைய நேர் வரிசைப் பற்கள் ஆறாயிரம் வாட் வெளிச்சத்தில் என் கண்ணை கூசவைத்தது.



விளம்பரப் படப்பிடிப்பு முடிந்ததும் ஐஸ்வர்யராய் போய் உடையை மாற்றி, மேக்கப்பை கலைத்து பிபிசியின் நேர்காணலுக்கு தயாரானார். வானத்தில் இருந்து அப்போதுதான் இறங்கி வந்த ஒரு தேவதையுடன் பழகுவது போலத்தான் எல்லோரும் அவரை ஒருவித பக்தியுடன் அணுகினார்கள். வயது முதிர்ந்தவர்கள்கூட மூன்றடி தள்ளி நின்று சற்று வளைந்த முதுகுடன் அவரிடம் பேசினார்கள்.

எனக்கு ஐஸ்வர்யராய் பற்றி தெரிந்ததெல்லாம் மிகவும் குறைவு. அவர் 1994ல் உலக அழகு ராணியாக தேர்ந்தெடுக்கப்பட்டது தெரியும். அவர் நடித்த ஒரு படத்தையாவது நான் பார்த்ததில்லை. அவர் அதிகச் சம்பளம் வாங்கும் ஒரு சிறந்த நடிகை என்றும், இந்தியாவில் அப்போது அவர்தான் முதல் இடத்தில் இருக்கிறார் என்றும் சொன்னார்கள்.

## முனைவர் எம். சஞ்சயன் (தமிழில் - பாலா)

அவருடைய முந்தைய காதலன் சல்மான் கான். ஐஸ்வர்யராய் நடித்த தேவதாஸ் படம் கான் திரைப்பட விழாவின் விசேட காட்சிக்கு தெரிவாகியிருந்தது. அமெரிக்காவின் டைம் பத்திரிகை உலகத்தின் முக்கியமான முதல் நூறு பேர்கள் பட்டியலில் அவருடைய பேரையும் சேர்த்திருந்தது. இந்தியாவின் அப்போதைய பிரதமர் பெயர் அந்த லிஸ்டில் இல்லை. இரண்டு தங்க முடிப் பெண்களில் ஒருவருடைய வேலை ஆராய்ச்சி செய்வது. அவர்தான் இந்த விபரங்களை சேகரித்து, இரண்டு பக்கங்களில் குறிப்புகள் தயாரித்து, என்னிடம் தந்திருந்தார். அவற்றை வைத்துக்கொண்டு என் நேர்காணலை நான் சிறப்பாகச் செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். பிபிசி அதை படம் பிடிக்கும்.

என்னை "டொக்ரர் சஞ்சயன்" என்று ஐஸ்வர்யராயிடம் அறிமுகப் படுத்தினார்கள். ஒரு இலையான் கூட புகமுடியாத அளவுக்கு உதடுகளை குவித்து "ஓ, டொக்ரர்" என்று அமர்ந்திருந்தார். கைப்பிடி இல்லாத ஒரு ஆசனத்தில் அவருக்கு முன்னால் உட்கார்ந்த நான் அதே கணம் நெளியத் தொடங்கினேன். பல ஆண்கள் அப்படி நெளிந்து அவர் பழக்கப்பட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அவருக்கு என்னுடைய அசௌகரியம் திருப்தியைக்கூட கொடுத்திருக்கலாம். பெருந் தன்மையாக என்னை சகஜ நிலைக்கு கொண்டு வருவதற்கு அவர் முயன்று கொண்டிருந்தார்.

ஆனால் என்னிடம் ஒரு காரணம் இருந்தது. ஒரு மாத காலமாக பிபிசியின் விவரணப் படக் குழுவுடன் நான் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் அலைந்திருந்தேன். டில்லி, கொல்கத்தா, மும்பாய், மதுரை, மைசூர், அஸ்ஸாம், முதுமலை என்று ஒரு இடத்தையும் விட்டுவைக்கவில்லை. கொல்கத்தாவில் பாம்பு பிடிகாரர்களையும், முதுமலையில் யானை பிடிப்பவர்களையும், மதுரையில் மாட்டுச் சண்டைக்காரர்களையும், அஸ்ஸாமில் காண்டாமிருகத்தின் காப்பாளர்களையும், மைசூரில் ஒரு நாள் முழுவதும் உழைத்து ஊதுபத்தி செய்து ஒரு டொலர் சம்பாதிக்கும் இளம் விதவையையும் நான் சந்தித்திருந்தேன். நாற்பத்தியாறாயிரம் பேர் வேலை பார்க்கும் இன்ஃபோசிஸ் (Infosys) கம்பனியின் அதிபர் நந்தன் நிலெகானியின் ( Nandan Nilekani) செவ்வியையும் பிபிசிக்காக பதிவு செய்திருந்தேன். இதுவே கடைசி நேர்காணல். இது முடிந்ததும் நான் வாசிங்டனுக்கு பயணமாகிவிடுவேன்.

முந்திய நாள்தான் இந்தியாவில் எங்கள் கடைசி இரவு என்றபடியால் நாங்கள் ஒரு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டிருந்தோம். இந்தியாவில் பயணம் செய்த முப்பது நாட்களும் இரண்டு முக்கியமான விதிகளை நான் கடைப்பிடித்து வந்தேன்.

1) காரமான உணவை தவிர்ப்பது.
2) கையிலே எப்போதும் இரண்டு நல்ல தண்ணீர் போத்தல்களை வைத்திருப்பது.

அந்தக் கடைசி இரவு இந்த தற்காப்பு வியூகத்தை சிறிது தளர்த்தி விட்டேன். காரமான உணவு வகைகளை வெள்ளைக்காரர்கள் சர்வ சாதாரணமாக வயிற்றுக்குள் தள்ளிக் கொண்டிருந்தார்கள். இந்த ஒரு மாத காலத்தில் அவர்கள் வயிற்றை எப்படியோ பழக்கிவிட்டார்கள். அவர்கள் முன்னால் நான் குறைந்தவன் இல்லை என்பதை காட்டிவிடவேண்டும் என்ற வேசத்தில் என் விதிகளை மீறியிருந்தேன். அதன் பின்விளைவுதான் என் உடம்பின் பின்பாகம் ஒத்துழைக்க மறுத்தது. அதிகாலை மூன்று மணியிலிருந்து பாத்ரூமுடனான என் உறவு அதிகரித்தது. இதைப் பற்றி நான் யாருக்கும் மூச்சுவிடவில்லை. ஒரு 45 நிமிடங்கள் என் வயிறு அமைதி காத்தால் போதுமானது, ஐஸ்வர்யராயு டனான என் நேர்காணலை வெற்றிகரமாக முடித்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன்.

ஐஸ்வர்யராய் இப்போது தயாராகியிருந்தார். முடியை கையினால் அளைவ-தை நிறுத்திவிட்டு என்னைப் பார்த்தார். நான், என் கையிலிருந்த குறிப்புகளை தள்ளி வைத்துவிட்டு என் மனதில் அந்த நிமிடம் தோன்றிய ஒரு கேள்வியைக் கேட்டேன். அதுவே முதல் கேள்வி.

"நீங்களும், நானும் இப்போது சேர்ந்து வெளியே போனால் என்ன நடக்கும்?"

ஐஸ்வர்யராய் மடிந்து சிரித்தார். பதின்பருவத்து பெண்ணின் சிரிப்புபோல அது கலீரென்று அடிவயிற்றில் இருந்து எழும்பி அறையை நிறைத்தது. அடிக்கடி அவருடைய தலைமுடி முன்னே விழுவதும் அவர் அதை சிலுப்பி பின்னே எறிவதுமாக நிமிடத்துக்கு மூன்று தடவை இது நடந்தது. முடியை பின்னே தள்ளுவது மட்டுமே தெரிந்தது. முடி எப்படி முன்னுக்கு வருகிறது என்பதை அந்த 45 நிமிடத்தில் என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

"ஏன், நாங்கள் சேர்ந்து போய்ப் பார்க்கலாமே. நான் தயார்," என்று சொல்லியபடி ஐஸ்வர்யராய் எழுந்து நின்றார்.

இந்த நிமிடம் என் வயிறு, அதற்கு விதிக்கப்பட்ட எல்லையை அடைந்துவிட்டது. நான் நேர்காணல் தொடங்குவதற்கு முன்பாக, படம் பிடிக்கும் இடத்திலிருந்து ஆகக்கிட்டவான பாத்ரூம் எங்கே இருக்கிறது, எவ்வளவு தூரம் என்பதை-யெல்லாம் என் கவனத்தில் நிறுத்தியிருந் தேன். எனக்கிருந்த கணக்கறிவையும், என்னுடைய அதிகபட்ச வேகத்தையும் மனதில் இருத்தி எத்தனை செக்கண்டுகளில் அந்த தூரத்தை கடக்கலாம் என்பதையும் கணித்து வைத்திருந்தேன்.

"மன்னியுங்கள்" என்றுவிட்டு பாத்ரூம் இருந்த திசையில் ஓட்டம் எடுத்தேன்.

மிகக் குறைந்த வசதிகள் கொண்ட பாத்ரூம் அது. நேர்காணலை பாதியிலே விட்டுவிட்டு வரும் ஒருவருக்காக அது நிச்சயம் கட்டப்பட்டிருக்கவில்லை. நான் எதிர்பார்த்ததற்கு மேலாக நேரம் எடுத்துக்கொண்டது. சேர்ட்டை அவசரமாக கால்சட்டைக்கு உள்ளே தள்ளி பழைய நிலைக்கு என்னை மாற்றிக்கொண்டு திரும்பினேன். இன்னும் 43 நிமிடங்கள் வயிறு தாக்குப் பிடித்தால் போதுமானது. வெளியே வந்தபோது என் வயிற்றினிடமிருந்து அந்த உத்தரவாதம் கிடைத்தது போலவே எனக்குப்பட்டது..

ஒப்பனைப் பெண் குனிந்து ஐஸ்வர்யராயின் காதுகளில் தன் வாயைக் குவித்து ஏதோ சொன்னார். விளக்குகள் மீண்டும் எரிந்தன. காமிராக்காரர் காமிராவுக்கு பின்னால் நின்றார். இயக்குனர் கடந்த பத்து நிமிடங்களாக தன் இடத்தைவிட்டு அசையவில்லை. சுற்றிவரச் சேர்ந்த கும்பல் அப்படியே நின்றது. இன்னும் பல மணித்தியாலங்களை அங்கே கழிப்பதற்கு அது சித்தமாயிருந்தது. நான் காமிராவை நோக்கி நடந்தேன்.



உலக அழகி எனக்காகக் காத்திருந்தார்.

*நன்றி - காலம்*


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything
தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.
#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா

*தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.*

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket
(17 Years Insurance Claims Experience)
416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND ®

எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# பரம்பரை வீட்டு வைத்தியம்

### *கடந்த இதழ் தொடர்ச்சி*

(15) இளநீர்மருத்துவம் - இளநீரில் தாதுப்பொருள்களாகிய இரும்பு, பொற்ராசியம், சுண்ணாம்புச்சத்து, சோடியம் ஆகியவை அதிகம் இருப்பதால் சிறுநீரக நோய்களை தடுக்கவும் குணமாக்கவும் பெரிதும் உதவும். குடலில் புழு பெருகுவதையும் குறைக்க வல்லது.

16) இரத்த அழுத்தம் (Blood Pressure) - இரத்த அழுத்தம் வராது தடுக்கவும் இருப்பின் குறைக்கவும் உணவில் மக்னீசியம் (Magnesium) அதிகம் சேர்த்துக்கொண்டால் நோய் இருப்பின் குணமாகும் நோயைத்தடுக்கலாம். இரத்தக் கொதிப்புள்ளவர்கள் மனப்பதட்டத்தை தவிர்க்க வேண்டும். தினம் சுவாசப்பயிற்சி, தியானம் செய்யவேண்டும். வைத்தியரின் ஆலோசனையுடன் தகுதியான உடற்பயிற்சி செய்தல் அவசியம். உணவில் உப்பை குறைக்கவேண்டும். இரத்தக்கொதிப்பு உள்ளவர்கள் காலை வறுத்த உள்ளி மூன்றும் மாலையிலும் வறுத்த உள்ளிப்பூண்டு மூன்றும் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். இஞ்சியைச்சுட்டு அரைத்து அத்துடன் சிறிது தேன் கூட்டி சாப்பிட்டால் தலைச்சுற்று குறைவதுடன் இரத்த அழுத்தமும் உடன் குறையும் பின் தகுதியான சிகிச்சை பெறலாம்.


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com


(17) இரத்த வாந்தி - நொச்சிப்பூவை நீரில் கலந்து நான்கு மணிக்கு ஒரு தடவை சிறிது சிறிதாகக்கொடுக்க வேண்டும். கஞ்சி ஆகாரம் கொடுக்கலாம். அரசம்விதை ஆலம் விதை இவற்றை சமமாக எடுத்து பசும்பாலில் கலக்கி சாப்பிட்டால் இரத்தவாந்தி குணமாகும். மாங்கொட்டையிலுள்ள பருப்பை எடுத்து உலர்த்தி தூள்செய்து அதில் அரை தேக்கரண்டிதூள் எடுத்து தேனுடன் சேர்த்துப்பிசைந்து காலை, மாலை சாப்பிட்டால் இரத்த வாந்தி குணமாகும்.



(18) இரத்த பேதிக்கு - இதற்கு முட்டைக்கோவாவை துவைத்துப்பிழிந்து அந்தச்சாற்றில் இரு மேசைக்கரண்டி சாறு எடுத்து அதற்கு அரை மேசைக்கரண்டி தேன் சேர்த்து காலையில் வெறும்வயிற்றில் கொடுக்கவும். அத்துடன் இளநீர், புளுங்கல் அரிசிக்கஞ்சி அடிக்கொரு தரம் கொடுக்கவும். ஒரு போத்தல் சுட்டு ஆறிய நீரில் இரு தேக்கரண்டி கறி உப்பும், நாலு தேக்கரண்டி மாச்சீனியும் (குளுக்கோஸ்), ஒரு தேசிப்பழச்சாறும் பிழிந்து விட்டு நன்கு கலக்கிவைத்து அந்த நீரை அடிக்கொரு தரம் கொடுத்தால் உடம்பிலுள்ள நீர்வற்றி தாதுப்பொருள் குறையும் ஆபத்து வராது. நன்கு கனிந்த விழாம்பழம், வில்வம்பழம் தேனுடன் சேர்த்துக்கொடுக்கலாம். சிலநாட்களுக்கு உணவில் உறைப்பு தவிர்க்கவும். தயிர் உணவில் சேரக்கலாம். நன்கு காயவைத்த நொச்சிப்பூவை இடித்து அரித்து எடுத்து அதில் ஒரு தேக்கரண்டி எடுத்து பன்நீரும் கற்கண்டும் ஆசர்த்து காலை, மாலை கொடுத்து வந்தால் இரத்தபேதி குணமாகும்.

(19) இருமலுக்கு - கடுக்காயைச்சுட்டு அதன்தோலை சிறிதளவு வாயில்போட்டு மென்று தின்றால் தொண்டை அரித்து இருமுதல் குறையும். எலுமிச்சம்பழச்சாறு, தேன், 'கிளிசறின்' (Glycerin) ஆகியவற்றை சம அளவு கலந்து அதில் ஒரு தேக்கரண்டி மூன்று வேளை குடித்தால் சாதாரண இருமல் குணமாகும். கடுகை இடித்து சூரணம்செய்து அதில் அரை தேக்கரண்டி எடுத்து தேனுடன் சேர்த்து குடித்தால் அதிகாலை ஏற்படும் குளிரால் ஏற்படும் சாதாரண இருமல் குணமாகும். முற்றின வெண்டக்காய் விதையை எடுத்து நீர்விட்டு அவித்து அதில் இரண்டு மேசைக்கரண்டி காலை மாலை குடித்தால் வரட்டு இருமல் குணமாகும். முதன்முதலில் சினையான பசுமாட்டின் மூத்திரத்தை (கோசலம், கோமயம்) எடுத்து அதில் பெரியவர்களுக்கு ஒரு மேசைக்கரண்டி, சிறியவருக்கு ஒரு தேக்கரண்டி தினம் கொடுத்தால் கக்குவான் இருமல் குணமாகும் என்கிறது ஒரு வாகடம். அதிமதுரம், துளசி இலை, ஆடாதோடை இலை, கடுக்காய், கண்டங்கத்தரிப்பழம் இவற்றை தனித்தனியே வெய்யிலில் காயவைத்து உலர்த்தி தனித்தனியே இடித்து பின் எல்லாவற்றையும் சேர்த்து இடித்து அரித்து பத்திரப்படுத்தவும் இந்தச்சூரணத்தில் மூன்று தேக்கரண்டியும் பசுநெய்விட்டு குழைத்து காலை, மாலை சாப்பிட்டு வெந்நீர் குடித்தால் கோழைக்கட்டு இருமல் குணமாகும். அம்மான்பச்சரிசி இலை எடுத்து அதைச்சாறு பிழிந்து ஒரு மேசைக்கரண்டி சாற்றுடன் தேன்கூட்டி சாப்பிட்டால் கோழைக்கட்டு இருமல் குணமாகும். திப்பிலியை இடித்து சூரணம் செய்து இரண்டு தேக்கரண்டி தூளுடன் தேன்சேர்த்து தின்றால் சாதாரண இருமல் குணமாகும். துளசி இலையை நன்கு கழுவி சுத்தம்செய்து அதை வாயில்போட்டு மென்று அதன் சாற்றை விழுங்கினால் இருமல் குணமாகும்.

(20) இருதய நோய்களுக்கு - இருதயநோயாளிகள், அவர்களது நாளங்களில் கொழுப்பு படிந்து அவற்றின் விட்டம் குறைந்திருப்பதால் ஏற்படுகிறது. மென்மையான மரக்கறி, பழவகை உணவுகள், கொழுப்பில்லாத தயிர் ஆகியவை உண்ணலாம், சீனிச்சத்து, உப்பு இவற்றைக்குறைப்பது அவசியம். செந்தாமரைப்பூ இதழ்களை கசாயம் செய்து தேன், கொழுப்பில்லாத பால் சேர்த்து காலையில் குடித்தால் இருதயநோய் படிப்படியாக குணமாகும். இருதயநோய் உள்ளவர்கள் தினம் மென்மையான உடற்பயிற்சி செய்தல் அவசியம். சுவாசப்பயிற்சி தினம் இருமுறையாவது செய்தல் அவசியம்.


இதைச்சுலபமாக எவரும் செய்யலாம். ஓரிடத்தில் நிமிர்ந்து இருக்கவும் வாயை நன்கு மூடிக்கொள்ளவும். வாய்க்குள் நாக்கை கீழ்முரசுடன் அழுத்தி வைத்துக்கொள்ளவும். (இது உடம்பை தளர்த்தியநிலை). கண்ணையும் மூடிக்கொள்ளவும். மூக்கால் மூச்சை நன்கு உள் இழுக்கவும். சில விநாடிகள் உள் வைத்திருக்கவும் பின் இழுத்த நேரத்திலும் இருமடங்கு நேரத்தில் மூச்சை வெளியே விடவும். இப்படி 15 முறை செய்யவும். தினம் மூன்று முறையாவது இந்தச்சுவாசப்பயிற்சி செய்தால் உடம்பு நன்கு தளரும். புகைத்தல், மதுபானம் தவிர்க்கப்படவேண்டும். மனதை அமைதியாக வைத்திருத்தல் அவசியம். இரவில் படுக்குமுன் சீமை அத்திப்பழம் மூன்றை கொழுப்பற்ற பாலில் காச்சி குடிப்பதும் இந்த நோயாளிகளுக்கு நற்பலன் தரும். கடுக்காய்கொட்டையை நீக்கி அதன் சதையை இடித்து சூரணம்செய்து அந்தத்தூளை கொழுப்பற்ற பாலில் காச்சி இரவில் குடித்தால் இருதயம் பலப்படும்.




18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 176



**இட - வல**

1. மேற்கோள்
5. கதிரவன்
6. மேல் மாடம்
7. உதரம் (வல-இட)
9. பழுப்பு நிறம் (வல-இட)
10. பிரி
12. யாழ். தீவகத்தில் அரச படு கொலைகள் நடந்த இடம்

**மேல் - கீழ்**

1. எக்காலத்தும்
2. வணங்கு
3. அருச்சுனனின் வில்
4. எழுதிய ஓலை (கீழ்-மேல்)
7. மன்னாரில் அரச படு கொலைகள் நடந்த இடம்
8. அம்பு எய்ய உதவுவது
10. கல்
11. காணியை பாவிக்க செய்யும் ஒப்பந்தம் (கீழ்-மேல்)
13. இளங்காய் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | வி | ற் | ச | லா | ந் | து | |
| ற் | | | ரி | | | வ | |
| ற | | து | த் | கூ | | ங் | |
| த் | | ம | தி | | தொ | கு | தி |
| தா | ய் | | ர | | ட் | | வ |
| ர் | | | ம் | ட | டி | ட் | க |
| | ஏ | சு | | | | | ப |
| உ | ரி | மை | க் | கு | ர | ல் | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் July 28, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**175இல் வெற்றி பெற்றோர்**
1) K. Partheepan, Toronto
2) Uma Varaprasatham, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**


5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

நகைச்சுவைத் தொடர் 150

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





ஈமெயில் காலத்தில் கண்டறியாத கோயில்குளம் பழைய பஞ்சாங்கங்கள் என சிலர் முணுமுணுக்கத்தான் செய்கிறார்கள்.

பிறிம்லி மீனா கையில் நகைச்சுவைப்புயல் வடிவேலுவின் நிகழ்ச்சி ரிக்கற்றுடன் சிரித்துக்கொண்டு வந்தர்.

மனிதன் தனது வாழ்க்கையை பலவாறு வகுத்துவைத்துள்ளான். உலகர் மனம் பல இடங்களை சுற்றி வந்தது. அதே தொழிலில் எந்த மாற்றமுமின்றி இருப்பவர்களும், தினம் தினம் முன்னேறத்துடிப்பவர்களும் பேஸ்மன்றில் வாழ்க்கையை ஆரம்பித்து இன்று இரண்டு மூன்று வீடுகளைச்சொந்தமாக வைத்திருப்பவர்களும். சிறிய இடத்தை வாடகைக்கு எடுத்து தொழில்செய்தவர்கள் இன்று ஒரு பெரிய தமிழர்க்கான சொந்தமாக வாங்கக்கூடிய புதிய கட்டடம் வரை வந்துது பெருமைதான்.







கொடிகள் பல வர்ணத்தில் வீடுகளிலும் வீதிகளிலும் பறந்துகொண்டிருந்தன. கனடா தினம் ஒருபுறம். உதைபந்தாட்ட உலககிண்ணம் ஒரு புறம்.

உலகப்பு உலகப்பு என்றபடி வந்தான் பிறிம்லி மீனாவின் மகன் மதன் கையில் வானவில் நிறத்தில் பல நாட்டுக்கொடிகள் பெரிய கனடியக்கொடி


ஆயிரம் இருந்தும் . . ஆயிரம் இருந்தும்.. . . .
எங்களுக்கு எது கொடி ? காணவில்லை



நீண்டபெருமூச்சு விட்டார் உலகர். உலகர், ராசம்மா, ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்ட் புளோர் செல்லம்மா வீட்டு ஹோலில் இருந்து ஆளையாள் பார்த்தவண்ணமிருந்தனர். கோல் கோல் எனும் சத்தமும் ஓ நோ என பரிதாபப்படும் சத்தமும் உள்ளேயிருந்து வந்துகொண்டிருந்தது. ஒரு பந்தை வைச்சு உருட்டி உருட்டி அடிக்கினம் வேறை வேலலையில்லை என புறுபுறுத்துக்கொண்டிருந்தா ஆட்டிலறி அன்னம்மா.

எப்போ உலகக்கிண்ணப்போட்டி ஆரம்பித்ததோ அன்றிலிருந்து இன்றுவரை ரிவியில் உலகர் கோஸ்டி பார்க்கும் சீரியல் சின்னத்திரை ஒன்றும் பார்க்க முடியாமல் போய்விட்டது. யாராவது தெரிந்தவர்களிடம் ரெலிபோனில் கேக்க கோல் அடித்தால் எல்லா வீடுகளிலும் அதே பிரச்சினைதான்.






1995ல் யாழ். இடம்பெயர்வில் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வன்னிக்கு சென்றதை விட, உயிரைப்பாதுகாக்க மன்னார்க்கடலில் படகுகவிழ்ந்து மக்கள் இறந்ததைவிட, தினம் தினம் வெட்டுக்கள் கொலைகளைவிட, ஆயிரக்கணக்கான மீனவர்கள் விவசாயிகள் தொழிலின்றி கஸ்டப்படுவதைவிட ரிவி யில் நாடகமும் சின்னத்திரையும் பாாக்காதது ஆட்டிலறி அன்னம்மா, செக்கண்ட் புளோர் செல்லம்மா போனறவர்களுக்கு பெரிய கஸ்டமாக இருந்தது.





ஆடி, ஆவணி, புரட்டாதி வெக்கைகாலம். கோயில்கள் கொடியேறி தேருடனே தீர்த்தம். ஆடி அமாவாசை ஏதோ அனுசரித்து வந்துவிட்டோம் என அதனைத்தொடர்ந்து அனுசரித்து வருபவர்களும் விஞ்ஞான உலகம் இன்ரநெற்

யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

MORTGAGE

- Good / Bad Credit
- Refinance
- 0% Down
- Self Employee

உங்கள் சகலவிதமான Mortgage தேவைகளுக்கும் அழையுங்கள்

தொடர்புகளிற்கு: மகா: 416.871.4151

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997








- No Spraying
- No Smelling
- No Moving

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes

365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# முடிவே ஒன்றின் ஆரம்பம்

## ஓடும் நீர் உறைவதில்லை 15

நமது வாழ்வில் மிக இலகுவாக அறியக்கூடியதும் ஆனால் பெரும் பாலானவர்களால் அறியப்படாததுமான விடயம் என்னவென்றால் நமது ஒவ்வொரு செயலின் ஆரம்பத்திற்கும் அடிப்படையாக அமைவது அந்தச் செயலின் மூலம் எதிர்பார்க்கப்படும் முயற்சியின் முடிவே. இந்த மறுக்கப்படமுடியாத உண்மையை நாம் புரிந்து கொண்டால் அதாவது முடிவை முன்னுணர்ந்து அதற்கான வழிமுறைக-ளைக் கண்டு ஒரு முயற்சியை ஆரம்பித்தால் அவை மிக வெற்றி கரமானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. மாறாக முடிவு தெளிவற்றதாயின் அல்லது முடிவு பற்றிய முன்னுணர்வின்றி ஆரம்பிக்கப்படும் முயற்சிகள் வெற்றியடைவதில்லை.

உண்மையில் ஒரு செயற்பாட்டின் விளைவுகள் முன்கூட்டியே உணரப்படக் கூடியதாக அமையும் போதும் உறுதிப்படுத்தப்படும் போதும் அந்த முடிவை நோக்கியே ஆரம்பம் தெளிவுபடுத்தப்படுவதால் தடுமாற்றங் களுக்கு இடமளிக்க வேண்டிய அவசியம் எழுவதில்லை. இதனையே ஒரு முயற்சிபற்றிய சிறப்பான ஆரம்பம் என்கிறோம். மாறாக முடிவை முன்கூட்டியே உணரமுடியாதவர்களின் ஆரம்பங்களில் பெரும்பாலானவை முற்றிலும் எதிர்பாராத முடிவையே தருகின்றன. இவை ஏமாற்றங்கள் என வகைப்படுத்தப்படு கின்றன. இருப்பினும் இந்த ஏமாற்றங்கள் கூட ஒரு தெளிவுபடுத்தப்படாத முடிவு ஒன்றில் இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு முடிவும் அதற்கான ஆரம்பமாக அமைவது உலக நியதியாக இருப்பதால் நமது முயற்சி ஒவ்வொன்றினதும் ஆரம்பம் அதன் முடிவை முன்னுணரும் அடிப்படையில் அமைவது அவசியமானதும் புத்திசாலித்தனமானதும் ஆகும். உதாரணமாக ஒருவர் குறிப்பிட்டதுறையில் கற்பதன் மூலம் அத்துறையில் நிபுணத்துவம் பெறமுடியும் என்ற முடிவை முன்கூட்டியே அறிவதன் மூலமே அந்த முயற்சியில் முழுமையாக ஈடுபடுகின்றார். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் சட்டவல்லுனர்கள் போன்றவர்கள் அத்துறையில் கல்வியை ஆரம்பிக்கும்போது அதன்முடிவு என்ன என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டதனாலேயே அத்துறையில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறான முடிவுகள் பற்றிய முன்னுணர்வு ஓர் ஆரம்பத்தின் அத்திவாரமாக அமைவதை நாம் உணர்கின்றோம். இருப்பினும் இவ்வாறான முடிவுகள் முன்கூட்டியே நிச்சயப்படுத்தப்பட்டிருப்பதால் முயற்சியின் ஆரம்பம் இலகுபடுத்தப்படுகின்றது.

KG Master
416.725.5112

உலகவரலாற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றுள்ள சரித்திர புருஷர்கள் மற்றவர்களால் உறுதிப்படுத்தப்பட்டிராத, மற்றவர்களால் அறிந்திராத முடிவு ஒன்றைத் தமது மனக்கண்முன் முற்றுமுழுதான நம்பிக்கையுடன் முன்னிறுத்தி அந்த முடிவை நோக்கி முழுமனதுடன் உழைத்தவர்களே. இங்கு ஓர் உன்னதமான மனஉணர்வு இந்த முடிவு பற்றிய முன்னுணர்வுக்கு அடிப்படையாகின்றது. இந்த முன்னுணர்வு அதிவிசேட மன உறுதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றது. இவ்வாறு முற்றிலும் புதிய ஒரு முடிவை முன்னுணர்ந்து ஆரம்பித்தவர்கள்தான் வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புக்களின் தந்தைகளாகப் பெயர் பதித்தவர்கள். இவர்கள் எல்லோரிடமும் காணப்படும் தனித்துவம் என்னவென்றால் முடிவை ஆரம்பமாக்கியமையே.

ஒரு முயற்சியின் வெற்றியும், வெற்றியின்மையும் அந்த முயற்சியின் பெறுபேறால் அதாவது முடிவால் அளவிடப்படுகின்றது. இங்கு அந்த முயற்சியின் முடிவு அளவுகோலாக அமைவதால் அந்த முடிவுபற்றிய முன்னுணர்வு உறுதியாக இருக்குமாயின் அந்த முயற்சியின் பெறுபேறு சாதகமானதாகவே அமையும். எனவே இங்கு நாம் அறிந்து கொள்ளவேண்டிய விடயம் என்னவென்றால் நமது ஒவ்வொரு ஆரம்பமும் அதன் முடிவிலிருந்து உருவாக்கப்படவேண்டியது என்பதே.

ஒரு முயற்சியை ஆரம்பிப்பதுதான் நமது பொறுப்பு. அதன் பெறுபேறுகள் நமது கையில் இல்லை. இறைவனிடம் தான் உண்டு என்பவர்களும் உண்டு. நெல்லை விதைப்பதுதான் நமது கடமை அதை வளர்ப்பது அவன் கையில் தான் உண்டு என்பார்கள். இவ்வாறு நாம் பல்வேறுவழிகளில் நமது கருத்துக்களை வெளிப்படுத்தும்போதும் கூட எதிர்பார்க்கப்படும் முடிவில் உறுதியாக இருக்கின்றோம் என்பதுதான் உண்மை. ஏனெனில் நெல்லை விதைக்கும் முன்பாக அந்தப்பயிர் சிறப்பாக வளர்வதற்கான சகல பராமரிப்புக்களையும் நாம் ஆரம்பிக் கின்றோம். இவை எதிர்பார்க்கப்படும் முடிவின் (சிறப்பான அறுவடை) அடித்தளத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது.

நமது வாழ்வின் ஒவ்வொரு முயற்சியும் அந்த முயற்சியின் முடிவை முன்னிறுத்துவதன் மூலமே ஆரம்பிக்கப்படுகின்றது என்ற நியதியை நாம் உணர்ந்து கொண்டால் ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் சிறப்பான பெறுபேறுகளைத் தரும். ஏனெனில் முடிவை மனத்தில் முன்னிறுத்தும் போது பாதை தெளிவாக்கப்படுகின்றது. பாதை தெளிவானதும் பயணமும் இலகுவாகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்தத் தெளிவான பாதையும் இலகுபடுத்தப்பட்ட பயணமும் நம்மைத் தவிர மற்றவர்களுக்குப் புரிவதில்லை. இந்தப் புரிந்துணர்வு அவர்களிடம் இல்லாமைக்கு முடிவு பற்றிய தெளிவின்மையே காரணம். இதனால்தான் முடிவை முன்னிறுத்திய முயற்சியொன்றில் நாம் ஈடுபடும்போது மற்றவர்களது நகைப்புக்கும், எதிர்ப்புக்கும் உள்ளாக வேண்டியுள்ளது. இருப்பினும் முடிவை முன்கூட்டியே நாம் உணர்ந்து ஒரு விடயத்தை ஆரம்பிப்பதால் முடிவில் வெற்றியாளர்களாகிவிடுகிறோம்.

முடிவில் இருந்துதான் ஒன்று ஆரம்பமாகின்றது எனும் போது அந்த முடிவின் தெளிவு முற்றுமுழுதாக உணரப்படும். அதாவது ஒவ்வொரு ஆரம்பமும் ஒரு முடிவை எதிர்பார்ப்பதால் அந்த முடிவே ஆரம்பமாகின்றது என்பது புலனாகின்றது. நாம் நாளாந்தம் ஈடுபடும் ஒவ்வொரு செயலும் அந்தச் செயலின் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்தே ஆரம்பிக்கப்படுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் முயற்சியாளர்களே. ஏதோ ஒன்றை நாம் தினமும் செய்து வருகின்றோம். முயற்சியில்லாமல் ஒருவர் உயிர்வாழக்கூட முடியாது. இருப்பினும் ஒரு சிலர் மட்டுமே தமது முயற்சிகளில் முன்னேற்றம் காண்பவர்களாகவும் வெற்றியாளர் களாகவும் காணப்படுகிறார்கள். இதற்கான காரணத்தை நாம் கூர்ந்து கவனிப்போமாயின் வெளிப்படும் உண்மை என்னவென்றால் வெற்றியாளர்கள் அனைவரும் தெளிவுபடுத்தப்பட்ட முடிவை முன்கூட்டியே அறிந்து ஒரு விடயத்தை ஆரம்பிக்கின்றார்கள் என்பதே. அதாவது முடிவே அவர்களின் ஆரம்பத்திற்கான ஆணிவேராக அமைகின்றது.

ஆம் வாசகர்களே! உங்கள் ஒவ்வொரு ஆரம்பமும் முடிவை முன்னுணர்ந்து உருவாக்கப்படட்டும். அப்போது பாதை தெளிவாகும். பயணம் இலகுவாகும். வெற்றியாளர்களாகுவீர்கள்!






**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை** Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*



JENNY AUTO SALES *INC.*




*(Kennedy & Steeles)*

கடந்த பத்து வருடங்களாக Jenny Auto sales, Markham மூலம் பல்லின மக்களின் நல் ஆதரவைப்பெற்ற Anton தற்போது வீடு விற்பனைத்துறையிலும் முன்னணியில் திகழ்கின்றார்.

| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Accord | - | 13,000.00 |
| 2001 | Toyota Corolla | - | 8,500.00 |
| 2003 | Toyota Corolla | - | 10,500.00 |
| 2002 | Honda Civic | - | 8,995.00 |
| 2002 | Honda RV | - | 14,995.00 |
| 1999 | Honda Civic | - | 7,500.00 |
| 1996 | Toyota Corolla | - | 3,995.00 |
| 1997 | Honda Accord | - | 5,995.00 |
| 1998 | Toyota Corolla | - | 6,500.00 |
| 1998 | Toyota Camry | - | 6,995.00 |
| 1997 | GM Savana | - | 4,500.00 |
| 2000 | Dodge Caravan | - | 4,500.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals
Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048
Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4





YARL WINDOW
BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்



விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

# சுய அலசல் - பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி

***சுய அலசல் மூலம், மாற்றப்பட வேண்டிய எம் கூடாத உணர்வுகளை நாமே முயற்சித்து மாற்றினால் அல்லது வேறொருவர் துணையுடன் மாற்றினால் எமது பிரச்சினை தீரும்.***

*எனக்குள்ளிருந்து எழும் வெவ்வேறு உணர்வுகளை அடையாளங்கண்டு, அவற்றை ஒருவித பயமுமின்றி நான் ஒப்புக்கொள்ளலாம் என்பதை உணர இன்று உடன்படுகிறேன்.*

*எமது மனதிற்குள் என்ன பிரச்சினை இருந்தாலும் அதை மூடி மறைத்து, எம் வாழ்வில் சகல சமாச்சாரங்களும் எப்போதும் சரியாகத் தான் நடக்கின்றன என வேடம் போடுவதில் நாம் ஒவ்வொருவரும் கை தேர்ந்தவர்கள், இல்லையா? சில சமயங்களில் நோயினால், துக்கத்தின் வேதனையால், பயத்தினால், விரக்தியினால் அல்லது மனக்குழப்பத்தினால் நாம் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கையில் "எப்படி சுகம்?" "நல்லாய் இருக்கிறாயா?" என யாரும் கேட்டவுடன், ஆம், "நல்லாய் இருக்கிறேன்", எனக் கூசாமல் கூறுவது தானே எமது வழக்கம்? வானொலி நிகழ்ச்சிகளில் கூட திரும்பத் திரும்ப இதைத் தானே செய்கிறோம்! ஆனால் உண்மையில் எமது உணர்வுகளை மதிக்காது, அவற்றை இப்படி நாம் மறுதளிப்பதனால், நாமே எமது சுயமதிப்பு, சுய அன்பு, எமது சுயத்தை உள்ளபடியே ஏற்றுக்கொள்தல் யாவற்றையும் வீணே பாழடித்துக்கொள்கிறோம். இவ்வாறு, உணர்வுகளை மறைப்பது பிழை! எமது உணர்வுகளை உள்ளபடியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சரிமுறை உணர்வுகளை சிறுவயதுமுதல் பிள்ளைகளில் ஊக்குவித்திட, அவர்களிற்கு ஆன்மீகம், மனித மேம்பாடுகளைக் கற்றுக்கொடுத்தல் அத்தியாவசியம். என்ன உணர்வு எமக்கு எழுந்தாலும் அதில் ஒரு பிழையும் இல்லை. ஏனெனில், வாழ்க்கைப் பயணத்தில் நாம் எவ்விடத்தில் நிற்கிறோம் என்பதை எமது உணர்வுகள் தான் எமக்குத் தெரியப்படுத்துகின்றன. எம் வாழ்வின் எந்த எந்தப் பகுதிகளை நாம் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை எமது உணர்வுகள் தான் எமக்குச் சொல்கின்றன. "இது சரியில்லை! இதில் ஏதோ பிழை இருக்கிறது! ஆகவே நான் என்னை மாற்றிக் கொள்ள வேண்டும்", என உணர்வுகள் அறிவுறுத்துகின்றன. எம்மை நடைப் பிணமாக்காமல் உயிருடன் வைத்திருப்பவை உணர்வுகள் தான். அவை எம்மை ஊக்குவிக்கின்றன. எமக்குப் பாடம் படிப்பிக்கின்றன. நாய்கள் போல் எமது உணர்வுகள் எமது பிரச்சினைகளை மோப்பம் பிடித்து அடையாளங் காட்டுகின்றன. உங்கள் ஆன்மீக ஆளுமை வளர்ச்சியை ஊக்குவித்து முன்னேற்றுபவை உணர்வுகள். ஆகவே உண்மையாக அனுபவிக்கும் உணர்வுகளை ஒப்புக்கொள்ளாது மறுதளிப்பது நீங்கள் தவறாகச் செயற்படுவதை எடுத்துக் காட்டுகின்றது. இது உங்களுக்கு ஒருபோதும் வெற்றியைத் தேடித் தராது.*

*சிலவேளைகளில் உணர்வுகள் உங்களை ஏமாற்றி விடலாம் என்பதில் உண்மை இருக்கிறது. தவறான சமயத்தினை அதுதான் சரியான சமயம் என நீ பிழையாக நினைக்கலாம். அல்லது நல்ல சந்தர்ப்பத்தை, அது சரியில்லை என நம்பி நீ நழுவவிடலாம். உனது உணர்வுகளை வெளிவர விடாது நீ அடக்கி அமுக்கும் போதுதான் இப்படியான பிழைகள் நடக்கும். ஏனெனில் நல்லதையும் கெட்டதையும் எப்போதும் அடையாளங் கண்டு கொள்வது சிரமம். எமது அலசலின் தன்மையை எமக்குத் தெரிவிப்பவை எமது உணர்வுகள் தான். எமது உணர்வு வாய்க்கால்களை நாம் சுத்திகரித்து, தடையின்றி எமது உணர்வுகளை வெளிப்படுத்தினால் தான் எமது உணர்வுச்சாரம் முதிர்ந்து மெருகேறும். எமது உணர்வுகளை ஏற்றுக்கொள்வது என்பது உணர்வுகளிற்கு அடிமையாகி விடுவதல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உடலின் ஆரோக்கியக் கோளாறு, இரசாயன மாற்றம் என்பன சில சமயங்களில் தாறுமாறான உணர்வுகளைத் தோற்றுவிக்கலாம் என்பதும் உண்மை. உங்கள் உணர்வுகளை மறுதளிக்காது ஒத்துக்கொள்வது தான் ஆரோக்கியமான உணர்வுச்சாரத்தின் திறவு கோல் என்பதை மறந்து விடாதீர்கள்.*



*உங்கள் உணர்வுகளில் கவனம் செலுத்தாது அவற்றை இன்றுவரை நீங்கள் அலட்சியப்படுத்தி வந்திருக்கலாம். என்னென்ன விதத்தில், எப்படியெப்படி செயற்படவேண்டும் என்பதைப் பற்றிய பயத்தில் உங்கள் உணர்வுகளைக் கவனமெடுக்காது நீங்கள் இருந்திருக்கலாம். உங்கள் உணர்வுகளை மதித்து பயப்படாது அவற்றை அடையாளங் கண்டு கொள்ளுங்கள். உணர்வுகளை முழுமையாக அநுபவிக்க நீங்களே உங்களை அநுமதியுங்கள். உங்கள் உணர்வுகளை நீங்கள் "ஆம், இது பயம், இது பொறாமை, இது வெறுப்பு, இது கோபம்" என ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆளுமை வளர்ச்சியைப் போஷித்து, உங்கள் மனப் புண்களை குணமாக்கிட நீங்கள் விரும்பினால், உங்கள் உண்மையான உணர்வுகளை, நம்பிக்கைக்குகந்த இன்னொருவருடன் அல்லது உளவளத்துணையாளருடன் நிச்சயம் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் ஆளுமை வளர்ச்சியைப் போஷித்து உங்கள் மனப்புண்ணை குணப்படுத்தி பிரச்சினையைத் தீர்த்திட நீங்கள் விரும்பினால் நம்பிக்கைக்கு உகந்த ஒருவருடன் அல்லது உளவளத் துணையாளருடன் நிச்சயம் உங்கள் உண்மை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எனது உணர்வுகளை அடையாளங்கண்டு அவற்றை ஒத்துக்கொண்டு அவை கெட்ட உணர்வுகளாய் இருந்தால் என்னை மாற்றிக்கொள்வதன் மூலம் எனது மனப்புண்ணை குணமாக்கும் முயற்சியில் இன்று நான் ஈடுபடுகிறேன்.*

## ஆளுமை (80) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-270-1214*



லலிதா புரூடி



# “தி டாவின்சி கோட்” திரைப்படத்துக்கு பகுத்தறிவுவாதிகள் விதித்திருக்கும் தடை மிகவும் துரதிஸ்டவசமானது

## நேர்காணல்: இயக்குனர் ஜகந்நாதன்

புதிய தலைமுறை தமிழ் சினிமா இயக்குநர்களில் உரத்த சிந்தனையும் அழகியல் நுட்பமும் கொண்டவர் இயக்குநர் எஸ். பி. ஜகந்நாதன். அவரது முதல் திரைப்படமான “இயற்கை” அதற்கான மிகச் சிறந்த சாட்சி. இந்தத் திரைப்படத்துக்காக இந்திய அரசின் தேசிய விருது பெற்றவர். மார்ச்சிய சிந்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டவர். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகவும் சிறிதுகாலம் செயல்பட்டுள்ளார். தனது இரண்டாவது திரைப்படமான “ஈ” யை சூப்பர் குட் பிலம்ஸஞ்க்காக இயக்குகிறார். “ஈ” திரைப்படம் மற்றும் அவருடைய எதிர்கால இலக்கு உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி “விளம்பரம்” பத்திரிக்கைகாக நம்முடன் பேசினார். வெளியே, கோடையை விடைபெறச் செய்து மழை தூறிக் கொண்டிருக்க, அவருடைய இல்லத்தில் இந்த உரையாடல் பதிவு செய்யப்பட்டது.

கேள்வி: சினிமா இயக்குனராக வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்போது, எதனால் தோன்றியது?

ஜகந்நாதன்: சின்ன வயதில் நிறைய திரைப்படங்கள் பார்ப்பேன். பத்திரிக்கைகள் வாசிப்பேன். சினிமா, கலை, இலக்கியம், ஓவியம் உட்பட அனைத்து கலை வடிவங்களும் என்னை பாதித்தன. மேலும் அரசியல், சமூகம் குறித்த எனது பார்வையையும் விசாலமாக்கின. மார்க்சிய சிந்தாந்த ஈடுபாடும் இக்காலகட்டத்திலேயே ஏற்பட்டது. கருத்து இல்லாத எந்த கலை வடிவமும் காலம் தாண்டி நிற்காது என்பது என் திடமான நம்பிக்கை. மைக்கேல் ஆஞ்சலாவுடைய சிற்பமும் ஓவியமும் இன்றுவரை உலகத்தில் சிறப்பாக போற்றப்படுவதற்கு காரணம், கருத்தோடு அதன் உணர்வும் சேருவதால்தான். மற்றொரு உதாரணம் டாவின்சி ஓவியங்கள். கருத்துப் பின்புலம் இல்லாமல், வெறும் உணர்வுகளை மட்டும் வைத்துக்கொண்டு ஓவியம் வரையமுடியாது. தொழில்நுட்ப பயிற்சி, கருத்து, உணர்வு இவைகள் அனைத்தும் அழகாக சேரும்போது ஒரு நல்லக் கலைஞனாக உருவாவதிலிருந்து உங்களைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது. இதே வரையறைதான் சினிமாவுக்கும். ஓவியத்திலும் உங்களுக்கு பரிச்சயம் இருந்தால் கூடுதல் பலம். இரண்டும் காட்சிசார் கலைகள் என்பதால் இதனைச் சொல்கிறேன். நான் சினிமாவுக்குள் வந்த கதை இதுதான். தமிழ் சினிமாவிற்குள் உணர்வோடு வந்தவர்களில் பலர் சினிமா உத்திகளையும் திறமைகளையும் சரியாகப் புரியாமல் பின்னடைந்தார்கள். இதுகுறித்த சரியான புரிதல் எனக்கு இருந்தது. சமூகம் குறித்த எனது பார்வையையும் கருத்தையும் சினிமாவின் தொழில்நுட்ப உத்திகளுடன் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடையத் திட்டம். “இயற்கை” யில் அதை சரியாக செய்துவிட்டேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. அடுத்த படத்திலும் இந்தப் பயணம் தொடர வேண்டும் என்பதுதான் இப்போது எனது கவலை.

கேள்வி: “இயற்கை” தேசிய விருது வாங்கியது. தேசிய விருது கிடைக்கும் என அதற்கு முன்பு எதிர்பார்த்தீர்களா?

ஜகந்நாதன்: உண்மையில் எதிர்பார்க்கவே இல்லை. படத்தின் எந்த ஒரு காட்சியைப் படமாக்கும்போதும் அப்படியொரு எண்ணம் என்னிடமில்லை. ஆனால், பரிசு கிடைத்த போது அது மனதில் மிகவும் சந்தோசத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

கேள்வி: உங்களின் இரண்டாவது படமான “ஈ” எதைப் பற்றியப் படம்?

ஜகந்நாதன்: “ஈ” நகர வாழ்க்கையோட சூழல் யாரை உற்பத்தி பண்ணுகிறது என்பதை விவரிக்கும் படம்.



**சந்திப்பு: சிவதானு**

கேள்வி: தற்போது வரும் பெரும்பாலான தமிழ் திரைப்படங்களில் படத்தின் நாயகர்கள் ரவுடிகளாகவும் குற்றவாளிகளாகவுமே சித்தரிக்கப்படுகிறார்கள். அப்படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. அதற்கு காரணம் என்ன, மக்களின் கண்ணோட்டம் மாறியிருக்கிறதா?

ஜகந்நாதன்: மக்களின் மனநிலை தற்போது வக்கீல்களையும் நீதிமன்றத்தையும் நம்புவதைவிட கூலிப்படைகளையும் ரவுடிகளையும் நம்பத் தொடங்கியுள்ளது. இப்படிச் சொன்னவர் வேறு யாரும் இல்லை, உச்சநீதிமன்ற நீதிபதிதான். நீதிபதியே இப்படிக் குறிப்பிடுகிறார். உண்மையில் குற்றவாளிகளை மக்கள் என்றைக்குமே ஏற்றுக்கொள்வதில்லை. மிகச் சிறந்த உதாரணமாக வீரப்பன், சென்னை தாதா வீரமணி ஆகியோர். இவர்கள் கொல்லப்பட்ட பிறகு மக்களிடம் அவர்கள் சார்பாக ஒரு சிறு அனுதாபம்கூட எழவில்லை. ஒன்றிரண்டு திரைப்படங்கள் வெற்றியடைவதை வைத்து நாம் இப்படியொரு முடிவுக்கு வந்துவிட முடியாது. நல்ல படங்கள் வந்தால் மக்கள் தரிக்க தயாராகவே இருக்கிறார்கள் என்பதுதான் இதற்கு காரணம்.

கேள்வி: தலைவர் பிரபாகரன், தமிழ் சினிமா பெண்களை இழிவுப்படுத்துவதாக, மிகவும் வருத்தத்துடன் இயக்குனர் மகேந்திரனிடம் கூறியுள்ளதாக சமீபத்தில் குமுதம் பத்திரிகையில் வந்துள்ளது. இதைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?

ஜகந்நாதன்: தலைவர் பிரபாகரன் தமிழ் சினிமாவைப் பற்றி கூறி இருப்பது நியாயமான விமர்சனம்தான். தமிழ் சமூகத்தின் மீது அக்கறையுடன் அவர் வெளியிட்டிருக்கும் இந்த விமர்சனத்தை, தமிழ் சினிமா உலகம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் எடுத்துக்கொண்டேன்.

கேள்வி: ஜெயகாந்தன், கோமல் சுவாமிநாதன், ஜெயபாரதி, ருத்ரைய்யா, லெனின் போன்ற கலை நுட்பமும் அழகியல் உணர்வும் சமூக அக்கறையும் கொண்ட இயக்குனர்கள், தொடர்ந்து தமிழ் சினிமாவில் இயங்க முடியாமல் போனதற்கு என்ன காரணம்?

ஜகந்நாதன்: நல்ல கேள்விதான். புதிய தயாரிப்பாளர்கள் எவரும் இதுபோன்ற முயற்சிகளை ஆதரிப்பது இல்லை. அதேநேரத்தில் முயன்று வெற்றிப்பெற்ற நல்ல இயக்குநர்களை பயன்படுத்தவும் அவர்கள் தயாராக இல்லை. ஜெயகாந்தன் எழுதி லெனின் இயக்கிய “எத்தனை கோணங்கள், எத்தனை பார்வைகள்” என்ற சிறந்த படம் இதுவரை வெளிவராமல் பெட்டிக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறது. நான்கூட அந்தப் படத்தை வெளியே கொண்டுவர என்னால் இயன்ற அளவு முயன்றேன், முடியவில்லை. இது போன்று ஏகப்பட்ட நல்ல படங்கள் வெளிவராமலே உள்ளது. இதுதான் இன்றைய தமிழ் சினிமாவின் தற்போதைய சூழல்.

கேள்வி: கேரளாவில் சந்திரன், அடூர் கோபாலகிருஸ்ணன், அரவிந்தன், ஸாஜிகருண், ஜெயராஜ், எம். டி. வாசுதேவன் நாயர், பத்மராஜன், பரதன் போன்றோர்கள் மாற்று சினிமாவுக்கான ஒரு தளத்தை உருவாக்கியுள்ளார்கள். தமிழ் சினிமாவில் இயக்குனர் மகேந்திரன், பாலுமகேந்திராவுக்குப் பிறகு, கடந்த இருபது ஆண்டுகளில் மாற்று சினிமாவுக்கான முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை என்ன காரணம்?

ஜகந்நாதன்: முந்தின கேள்விக்கு சொன்ன அதே பதில்தான். முதலில் கேரளத்தில் நடப்பது மாதிரி மாற்று சினிமாக்கள் வெற்றிப்படங்களாக ஆக்கப்படனும். கேரளாவில் நீங்கள் குறிப்பிடும் இயக்குனர்களின் படம் மாற்று சினிமாவாகவும் வெற்றிப்படங்களாகவும் அமைகிறது. காரணம் நீங்கள் குறிப்பிடும் இந்த இயக்குனர்கள் வெறும் கருத்தோடு மட்டும் சினிமாவுக்குள் வரவில்லை. சினிமாவின் மேதமையும் அவர்களிடம் இருந்தது.

கேள்வி: ஆஸ்கர் விருது பற்றி அவ்வப்போது தமிழ் சினிமாக்காரர்கள் பேசுகிறார்கள். இந்திய சினிமாவிற்கு ஆஸ்கர் விருது கிடைக்குமா?

ஜகந்நாதன்: இந்திய சினிமா படங்களுக்கு ஒரு போதும் ஆஸ்கார் விருது கிடைக்காது.



ஆங்கிலப் படங்களுக்கு மட்டுமே அந்த விருது கிடைக்கும். ஒருவேளை இந்தியாவில் எடுக்கப்படும் ஆங்கிலப் படங்களுக்கு கிடைக்கலாம். இந்திய சினிமாவுக்கு அல்லது தமிழ் சினிமாவுக்கு சிறந்த வெளிநாட்டுப் படம் என்ற விருது வேண்டுமானால் கிடைக்கலாம்.

கேள்வி: தமிழ் சினிமா இசையில் இளையராஜா ஒரு சகாப்தம். அவர் குறித்த உங்கள் மதிப்பீடு என்ன?

ஜகந்நாதன்: இசையில் இளையராஜா ஒரு மாமேதை. குறிப்பாக கிட்டாரில் எயிட்கிரேடு தாண்டியவர் என்று சொல்கிறார்கள். அவரை மதிப்பிடும் அளவுக்கு எனக்கு தகுதி கிடையாது. இளையராஜா, பாவலர் வரதராஜனோடு தமிழ்நாட்டின் குக்கிராமங்கள் முதல், பெருநகரங்கள் வரை சென்று இசையமைத்துப் பாடியவர். அவருக்குத் தெரியும் மக்கள் எந்த இடத்தில் கைதட்டுவார்கள், வரவேற்பார்கள் என்பது. இந்த ஒரு தகுதி மட்டுமே இசையமைப்பாளராக ஆக்கிவிடாது. அவருக்கு வாழ்க்கை தெரியும். அதுதான் அவரது பலம்.

கேள்வி: திரைப்படத்தில் இந்திய அரசு கொண்டு வந்திருக்கும் மிருகவதை தடைச்சட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கேள்வி: சினிமாவில் சரியான முறையில்லாமல் மிருகங்கள் வதைக்கப்பட்டது உண்மையே. அதிலிருந்துதான் இந்த சட்டம் வருகிறது. ஆனால், தற்போது குதிரையில் சவாரி செய்வதே குற்றம் என்கிறார்கள். உதாரணமாக சென்னை மெரீனா பீச்சில் குதிரையை வைத்து ஒருவர் பிழைப்பு நடத்தி வந்தார். அதில் கிடைத்த வருமானத்தில் குதிரையும் அவரும் வாழ்ந்து வந்தார்கள். இந்த தடைச் சட்டத்தால் குதிரைக்கு கொள்ளு வாங்கிப்போடக்கூட முடியாமல் அந்த குதிரை செத்துவிட்டது. உண்மையில் இதுதான் மிருகவதை. குதிரையில் மனிதன் சவாரி செய்யக்கூடாது என்றால் குதிரை எதற்கு?

கேள்வி: “தி டாவின்சி கோட்” திரைப்படம் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டிருப்பதைப் பற்றிய உங்களின் கருத்து என்ன?

ஜகந்நாதன்: இந்தத் தவறு தமிழ்நாட்டில், அதுவும் பகுத்தறிவுவாதிகளாலேயே செய்யப்பட்டது மிகவும் துரதிஸ்டவசமானது. இது சினிமாவுக்குள் மாற்று சிந்தனை, மாற்றுப் பார்வை வருவதை நசுக்குவதாக உள்ளது. இது கண்டிக்கத்தக்கது.


**ஞானம்ஸ் ஸ்ருடியோ**

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்- 416-750-8118

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough



**ELECTRICAL WORKS**

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

சுயாதீன கலை திரைப்பட மையம் - ரொரன்ரோ - கனடா

**ஐந்தாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா - ஆவணி 2006**

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் யூலை 10 ஆம் நாள் (July 10, 2006)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி - Independent Art Film Society of Toronto

4 Castlemore Avenue, Markham, ON , Canada L6C 2B3

905-887-7457 / 416-450-6833 / 416-400-6406

rathan@rogers.com, www.iafstamil.com

# ஒரு காலத்தின் உயிர்ப்பு

## ஆனி 03, 04, 2006 - நாடக அரங்கு



இடம்: மலையின் உச்சி
காலம்: வசந்தம்
இயங்கிகள்: தீலீப் குமார், தர்சன், சந்தியா
இயக்கியவர்: பா. அ. ஜயகரன்

இயங்கிகள் பற்றிய விசாரணை.
இயங்கி 1.: தீலிப் குமார் - மிகச்சிறந்த இயங்கி என பெயர் பெற்றவர். கடந்த பதினைந்து வருடங்களாக பல்வேறு நெறியாளர்களின் நெறி யாள்கையில் இயங்கியவர். படைப்பை பற்றிய நுணுக்கங்களை அறிந்தவர்.

இயங்கி 2.: தர்சன் - பத்திரிகையாளர். கடந்த சில வருடங்களாக நாடக நுணக்கங்களை அறிந்தவர். பல நெறியாளர்களின் நெறி யாள்கையில் இயங்கியவர்.

இயங்கி 3: சந்தியா - குறும்பட உலகில் பலரும் அறிந்த சிறந்த நடிகை. கடந்த வருட குறும்பட விழாவில் சிறந்த நடிகை விருதைப் பெற்றவர். நீண்ட நாடக அனுபவம் பெற்றவர்.

இயல்புக்கு மாறான இடத்தை, தற்கொலைக்காக நாடியுள்ள இளைஞன், ஏற்கனவே அங்கு தங்கியுள்ள முதியவர். இவர்கள் சந்திக்கும் பொழுது என்ன பேசிக் கொள்வார்கள்? ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொள்வார்கள். விசாரணையின் உச்சத்தில் ஒருவரை ஒருவர் விமர்சிப்பார்கள். இளைஞன் மரணத்தை தேடி மலை உச்சியில், அங்கு நம்பிக்கையுடன் முதியவர். வாழ்க்கையின் முரண்கள் நிலைகள் இங்கு விசாரிக்கப்படுகின்றது. இரு வேறு தளங்களில் இவர்கள். மேடையில் ஒரு பாதியில் ஒருவர், மறுபாதியில் மற்றவர். முதியவர் மறுபாதிக்கு வந்த போதினிலும், இளைஞன் மறுபாதிக்கு செல்லவில்லை. இது அவனது மரணத்தைப்பற்றிய உறுதியை வெளிப்படுத்துகிறது.

மலையின் உச்சியில் முதியவர் என்ன செய்து கொண்டிருப்பார்? இயற்கை அழகை இரசிப்பார். பறவைகளை இரசிப்பார். அவை பற்றி அறிந்து கொள்வார். இவரது தனிமையை கலைக்க ஓர் இளைஞன் மலையேறி வரும் பொழுது அவரது விசாரணைகளில் அவனது மரணத்தை தடுக்கும் அக்கறை என்பதை விட தனது நினைவுகளின் குற்ற உணர்வில் தோன்றிய விசாரணையாகவே வெளிப்படும். இதன் முரண் நிலை இளைஞனுக்கு, அவனது விசாரணைகளும் தனது இருப்பை நிலைப்படுத்தும் வெளிப்பாடாக வெளிப்படும்.

மலை உச்சிக்கு பறவைகளை பற்றிய ஆய்வுக்காக வரும் இளைஞி, அவளது செயல் பாடுகள், இளைஞனுக்கு நம்பிக்கையையளிக் கின்றன. இங்கும் மீண்டும் ஒரு முரண் நிலை. இவர்களது விசாரணைக்கு முன்பாகவே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். அவள் காவி வந்த செய்தி முதியவரின் காதலைப் பற்றியது. அவரது அவரணைப்பில் சில காலங்களை களித்த பேராசிரியைப்பற்றியது. முதியவரின் நினைவு களுடன் மீண்டும் நாடகம் தொடங்குகிறது.

போலாந்து நாட்டு நாடகர் Grotowski; ஒரு நாடகத்துக்கு தேவையானது நடிகனும் பார்வையாளனும் மட்டும் தான் என்றார். இவர் ஏழை நாடக மேடை என்று கூறிக் கொண்டு மிகவும் எளிமையாக நாடகங்களையளித்தார். வீதி நாடகங்கள் Grotowski யால் மெருகூட்டப்பட்டன. இந்த நாடக உத்திகளை ஜெயகரனும் கையாண்டுள்ளார்.

தமிழ் மேடைநாடகம் இராண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் தோன்றியதாக கூறப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் :
சோற்றுச்செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை
சொல்வித்ததே

பரிபாடலில் :
தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்
பரிமா நிரையிற் பரந்தன்று மையை
என்பவை சில சான்றுகள்.

ஆனால் கி.மு. 384-322 காலப்பகுதியில் வாழ்ந்த அரிஸ்டோட்டல் நாடகத்தின் வாய்ப்பாடுகள் ஏழினை குறிப்பிட்டுள்ளார். நாடகத் தொடக்கம் நடு முடிவு, பாத்திரங்களின் அமைப்புமுறை, காட்சிமுறை, சொல்லப்பட வேண்டிய கருத்துக்கள மேடை, அமைப்புமுறை, நடிகர்களின் இலக்கணம், நாடக ஆசிரியரின் உத்திகள்.

இவ்வாறான நாடக வரலாற்றில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஜெயகரன் நடிகர்களையும், கருத்தையும் மிகக் குறைந்த தொழில் நுட்ப வசதிகளுடன் இயக்கியுள்ளார். சோவியத் அறிஞர் Maxim Gorky ன் சில நாடகங்கள் Stanislavsky ல் அரங்கமுறையிலேயே மேடையேற்றப்பட்டன.

இப்பிரதி அபத்த நாடக வகையைச் சார்ந்தது. இதனை வெகு முனைப்புடன் கையாண்டுள்ளார் இயக்குனர். இது இவரது சொந்த பிரதியாகும். தமிழில் மிகச்சிலரே தமது சொந்த பிரதிகளை நெறியாள்கை செய்பவர்கள். தமிழ் வெளிவந்த மிகச்சிறந்த பிரதிகளுள் இதுவும் ஒன்று. இவரது பிரதிகளுள் இது சிறந்தது.

மேடையில் திலீப்குமார், தனது சிறந்த ஆளுமையால் நாடகத்தின் உரைஞராகவும், வழிகாட்டியாகவும், சில சமயங்களில் மேடை இயக்குனராகவும் செயல்பட்டுள்ளார்.

இவரது ஒப்பனை கூட வழமைக்கு மாறான (தாடி) தோற்றத்தை கொடுத்தாலும், நெறியாளரையும். நாடகத்தையும் முழுமையாக வெளிப்படுத்தியுள்ளர். ஊடல் இயக்கம், குரல், முக பாவங்கள் இவர் ஒரு சிறந்த நடிகர் என்பதை வெளிக்காட்டுகிறது.

